Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி 21 வெள்ளிக்கிழமை (07-11-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:344


## ஆத்திரப்பட்டு எதனையும் செய்யத் தயாரில்லை

# தென்னிலங்கை அரசியல் மாற்றங்களை நிதானமாக அவதானித்து வருகிறோம்

### விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கருணா தகவல்



மட்டக்களப்பு,நவ.7

வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்த கதையே தற்போது நடைபெற்றுள்ளது. நாம் இடைக்கால நிர்வாக வரைவை வரைந்து எமது மக்களின் உரிமைக்காக கொடுத்திருக்கும் இவ்வேளையில், ஜனாதிபதி சந்திரிகா, உலகமே எதிர்பார்த்திராத நடவடிக்கையில் ஈடுபட்டு குழப்பமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளார்

இதனால், தென்னிலங்கையில் வித்தியாசமான அரசியல் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனை எமது தலைவர் மிகவும் நிதானமாக அவதானித்து வருகின்றார். தென்னிலங்கை அரசியல் நிலைமைகளை அவதானித்து அதற்கேற்ப முடிவுகளை மேற்கொள்வோம். ஆத்திரப்பட்டு எதனையும் செய்யத் தயாரில்லை.

- இவ்வாறு தெரிவித்தார் மூத்த தளபதியும் விடுதலைப் புலிகளின் சமாதான பேச்சுக்குழுவின் உறுப்பினருமான கேணல் கருணா அம்மான்.

விடுதலைப் புலிகளின் ரசிகன் இசைக் குழுவினால் மீளிசை இசைத்தட்டு வெளியீட்டு விழா நேற்று மாலை விடுதலைப் புலிகளின் கரடியனாறு தேனக சந்திப்பு மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி த.ரமேஸ் உட்பட (14ஆம் பக்கம் பார்க்க)

## மழையால் இயல்பு நிலை பாதிப்பு

யாழ்ப்பாணம்,நவ.7

யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று அதிகாலை முதல் பெய்த கடும் மழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை ஸ்தம்பித்தது. ஒரு சில பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைவாகவே காணப்பட்டது. அரச அலுவலகங்கள் சில (14ஆம் பக்கம் பார்க்க)

# ரணிலின் தலைமையில் புஷ் நம்பிக்கை

# சமாதான முயற்சிகளுக்கு பலத்த ஆதரவு

## அமெரிக்க விஜயத்தை முடித்து இன்று நாடு திரும்பும் பிரதமருக்கு வரவேற்பு

### கட்டுநாயக்காவிலிருந்து கொழும்புவரை ஏற்பாடுகள்



கொழும்பு,நவ.7

உள்நாட்டில் பெரும் அரசியல் நெருக்கடியை எதிர்நோக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது அமெரிக்க விஜயத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு இன்று காலை 8 மணிக்கு நாடு திரும்புகிறார். அவருக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்திலும் விமான நிலையத்திலிருந்து கொழும்புக்கு வரும் வழிநெடுகிலும் பெரும் வரவேற்பளிக்க ஐ.தே.க. ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது.

இதேவேளை, தேசாபிமான தேசிய இயக்கம் நாட்டுப் பிரிவினைக்கு எதிராக இன்று கொழும்பில் ஊர்வலத்தையும் பொதுக் கூட்டத்தையும் நடத்துகிறது. கொழும்பு மாநகரசபைத் திடலிலிருந்து பிற்பகல் 2 மணிக்கு ஊர்வலத்தை ஆரம்பித்து, பொரளை கெம்பல் மைதானத்தை அடைந்ததும் பொதுக்கூட்டம் நடைபெறும்.

கூட்டத்தில் சு.க., ஜே.வி.பி., மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளின் தலைவர்கள் உரையாற்றுவர்.

ஒருவாரகால வெளிநாட்டு விஜயத்தை முடித்துக் கொண்டு பிரதமர் ரணில் இன்று காலை 8 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைவார்.

பிரதமருக்கு வழி நெடுகிலும் பெரும் வரவேற்பளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (14ஆம் பக்கம் பார்க்க)

## இரு தலைவர்களும் பேசி முடிந்ததும் வெள்ளை மாளிகை அறிவிப்பு

வாஷிங்ரன்,நவம்பர்7

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். பிரதமரினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு அவர் பலத்த ஆதரவு தெரிவித்திருக்கிறார். பிரதமர் ரணிலுக்கும் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்கும் இடையிலான பேச்சுக்களை அடுத்து வெள்ளை மாளிகை இவ்வாறு அறிவித்திருக்கிறது.**

வெள்ளை மாளிகையின் ஓவல் அலுவலகத்தில் ஜனாதிபதி புஷ்ஷுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் பின்னர், வெள்ளை மாளிகைப் பேச்சாளர் மக்கிலான் பத்திரிகையாளர்களுடனான சந்திப்பின்போது இதனைத் தெரிவித்தார்.

"இலங்கைப் பிரதமருக்கும் ஜனாதிபதி புஷ்ஷுக்கும் இடையிலான சந்திப்பு மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது. பிரதமரின் சமாதான முயற்சிகளுக்கும் இலங்கையில் நடைமுறை (14ஆம் பக்கம் பார்க்க)

## நாரந்தனைத் தாக்குதல் வழக்கு முதனிலை விசாரணைகள் பூர்த்தி

யாழ்ப்பாணம்,நவ.7

கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் பிரசாரப் பணிக்காக தீவகம் நோக்கிச் சென்ற தமிழ்க்கூட்டமைப்பினர் மீது நாரந்தனையில் வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கு நீதிவான் நீதிமன்ற விசாரணைகள் பூர்த்தியடையும் நிலைக்கு வந்துள்ளன.

இந்த வழக்கு விசாரணை நேற்று யாழ்.நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் நடைபெற்றது.

அரசதரப்பில் கடைசி சாட்சிகளாக திருநாவுக்கரசு ரவீந்திரன், நவரத்தினம் கணேஸ்வரன் ஆகியோர் சாட்சியம் அளித்தனர்.

சட்ட வைத்திய அதிகாரியின் சாட்சியம் இன்று பதிவுசெய்வதுடன் அரச தரப்பு சாட்சியங்கள் பூர்த்தியடையும்.

எதிர்த்தரப்பு சார்பில் எவராலும் சாட்சியம் அளிக்க முன்வராவிட்டால் (14ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சு மூலமான தீர்வு முயற்சிக்கு ஜனாதிபதியின் வழிகாட்டல் கிட்டும்!

### நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிப்பு

ஐக்கிய தேசிய முன்னணி அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்ந்து பேச்சுநடத்தும் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக செயலகம் நேற்று விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 4ஆம் திகதி அரசின் சில துறைகளின் பொறுப்பை ஜனாதிபதி தானே ஏற்றுக்கொண்டமை நாட்டில் வதந்திகளுக்கும் அதன் மூலம் சஞ்சலமான நிலைமைக்கும் வழி செய்துள்ளது. இத்தகைய சூழ்நிலையில் தந்திரங்களும், உண்மைக்கு மாறானவையும் தங்கள் கைவரிசையைக் காட்டத் தொடங்கிவிடும்.

குழப்பமடையவோ அல்லது எச்சரிக்கையடைவதற்கோ காரணம் ஏதுமில்லை என்று ஜனாதிபதி இலங்கை (14ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 பாதையில்

## செஞ்சிலுவையின் பிரசன்னம் தொடரும் என அறிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.7

... பாதையில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரசன்னம் தொடர்ந்து இருக்கும். அதில் எந்த மாற்றமும் இல்லை என்று அந்த அமைப்பின் யாழ். அலுவலக அதிகாரி 'உதயனுக்கு' தெரிவித்தார்.

ஏ-9 பாதை போக்குவரத்துக்கு மூடப்படும் என பரவும் வதந்திகள் குறித்தும் கேட்டபோதே அவர் (14ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் மாற்றங்களை இந்தியா அவதானிக்கிறது

### ஜனாதிபதியுடனான உரையாடலில் வாஜ்பாய்

கொழும்பு,நவ.7

இலங்கையில் ஏற்பட்டு வரும் அரசியல் மாற்றங்களை இந்தியா உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கின்றது. உள்நாட்டிலேயே பேச்சு நடத்தி ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு ஒன்றைக் காணவேண்டும்.

- இப்படி இந்தியப் பிரதமர் வாஜ்பாய், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குத் தெரிவித்துள்ளார். (14ஆம் பக்கம் பார்க்க)

## லீவில் வந்த புலி உறுப்பினர் கடற்கரையில் சடலமாக மீட்பு

### திருமலை பிரட்ரிக் கோட்டை அருகே சம்பவம்

திருகோணமலை,நவ.7

கழுத்து நெரிக்கப்பட்டு கொலைசெய்யப்பட்ட நிலையில் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரின் சடலம் திருகோணமலைக் கடற்கரையில் மீட்கப்பட்டுள்ளது.

திருகோணமலை பிரட்ரிக் கோட்டைக்குச் சமீபமாக இந்தச் சடலம் கடந்த செவ்வாயன்று மீட்கப்பட்டது.

வன்னியில் இருந்து லீவில் (14ஆம் பக்கம் பார்க்க)




இலவச ஆயுள் காப்புறுதிக் காப்பு!

NSB இன் சேமிப்புக் கணக்குகள் ஒன்றில் ரூபா.10,000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை பேணுவதனூடாக ரூபா.300,000/- வரையிலான இலவச ஆயுட் காப்புறுதியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

NSB

(அவசர காலநிலை பிரகடனத்தை அடுத்து)

# கொரிய வைத்தியர்களின் பணி நேற்றுடன் முடிவடைந்தது

## இன்று காலை கொழும்பு திரும்புவர்

கொரியா நாட்டின் வைத்திய நிபுணர்கள் குழு தனது பணியை இடைநிறுத்தி கொழும்பு திரும்புகின்றது. கைதடி சித்த போதனா வைத்திய சாலையில் கடந்த 4ஆம் திகதி ஆரம்பமான கொரிய வைத்திய நிபுணர்களின் மருத்துவ சேவை முகாம் இன்றுவரை இடம்பெறவிருந்தது.

நாட்டில் நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளதை அடுத்து தமது சேவைகளை நேற்றுடன் நிறுத்திய இந்தக் குழுவினர் இன்று காலை கொழும்பு திரும்புகின்றனர்.

ஆயிரம் பேருக்கு மருத்துவ சேவையை வழங்கும் நோக்குடன் அதற்கு ஏற்றவகையில் மருத்துவ பொருள்கள் இந்தக் குழுவினரால் யாழ். எடுத்துவரப்பட்டிருந்தன என்றும் நேற்று மாலை வரை ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இந்த மருத்துவ சேவைக்கு பிரசன்னமானதால் மருத்துவ பொருள்கள் தீர்ந்துவிட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-3)

# பொத்துவில் வைத்தியசாலையில் வேலை பகிஷ்கரிப்புப் போராட்டம்

## காவலரைத் தாக்கியோரைக் கைது செய்யக் கோரிக்கை

நிந்தவூர்,நவ.7

பொத்துவில் மாவட்ட வைத்தியசாலை தாதி உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் நேற்று வேலை பகிஷ்கரிப்புப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு வைத்திய சாலையில் இரவு காவல் கடமையில் ஈடுபட்டிருந்த ஊழியர் ஒருவர், பிரசவ விடுதிக்குள் அத்துமீறிப் பிரவேசிக்க முயன்ற மூன்று நபர்களை அங்கிருந்து வெளியேறுமாறு கேட்ட போது அந்த மூன்று நபர்களாலும் தாக்கப்பட்டுள்ளார்.

குறித்த மூன்று நபர்கள் மீதும் பொலீஸ் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமெனக் கோரியுமே போராட்டம் நடைபெற்றது. போராட்டம் காரணமாக வைத்தியசாலையின் வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவு இயங்கவில்லை. இதனால் நோயாளர்கள் சிகிச்சை பெற முடியாது திரும்பிச் சென்றனர். ஆயினும், அவசர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

சந்தேக நபர்கள் மீது பொலீஸார் உரிய நடவடிக்கை மேற்கொண்டதும் வேலை பகிஷ்கரிப்புப் போராட்டம் கைவிடப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (எ)

### ஜனாதிபதியின் இந்திய விஜயம் ரத்தானது

கொழும்பு,நவ.7

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று இந்தியாவுக்கு மேற்கொள்ள விருந்த விஜயம் ரத்துச் செய்யப்பட்டது. நாட்டில் உருவாகியிருக்கும் புதிய அரசியல் சூழ்நிலையே இதற்கான காரணமாகும் என்று அவதானிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையே தன்னை உள்துறை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கியதை ஏற்கப் போவதில்லை எனக் கூறி ஜோன் அமரதுங்க நேற்றுமுன் தினம் உள்துறை அமைச்சுக்குச் சென்று சிறிது நேரம் கடமைகளில் ஈடுபட்டிருந்தார்.

அமைச்சின் மேலதிகச் செயலாளர்கள் உட்பட உயர் அதிகாரிகளுடன் அவர் பேச்சு நடத்தினார். (எ)

# மிதிவெடி அகற்றுதலை துரிதப்படுத்த மேலதிக பணியாளர் ஆள்சேர்ப்பு

## விசேட பயிற்சி வழங்கவும் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,நவ.7

யாழ்.குடாநாட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் மிதிவெடியகற்றும் பணிகளை மேலும் துரிதப்படுத்துவதற்கென அடுத்த ஆண்டு முதல் கூடுதலான பணியாளர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

யாழ். செயலகத்தில் இயங்கும் மிதிவெடியகற்றும் பிரிவின் அதிகாரி எஸ்மோ ஆனந்தராஜா இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். குடாநாட்டில் மிதிவெடியகற்றும் நடவடிக்கைகள் தற்போது துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும், அநேக இடங்களில் இன்னும் மிதிவெடியகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. இதற்காகப் பெருமளவு ஆளணி தேவைப்படுகிறது.

இதனால், தற்போது யாழ். குடாநாட்டில் மிதிவெடியகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் நிறுவனங்கள் அடுத்த ஆண்டு முதல் தமது ஆளணியை மேலும் ஒரு மடங்காக அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளன.

இதற்காக, அடுத்த ஆண்டு முற்பகுதியில் ஆளணியினர் திரட்டப்பட்டு அவர்களுக்கென விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. முழு ஆளணியினரும் யாழ். குடாநாட்டிலிருந்து தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு வெளிநாட்டு நிபுணர்கள் பயிற்சி வழங்குவர். இதன் மூலம் 2006ஆம் ஆண்டில் யாழ்குடாநாட்டை மிதிவெடியற்ற பிரதேசமாக மாற்ற முடியும் என நம்புகின்றோம்.

தற்போது மிதிவெடியகற்றிவரும் 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனத்தினர் புதிய இயந்திரங்களைப் பயன்படுத்தி மிதிவெடியகற்றும் பணியைத் துரிதப்படுத்தியுள்ளனர். இந்த இயந்திரங்களை இயக்குவதற்கும் யாழ். குடாநாட்டைச் சேர்ந்த பணியாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன - என்றார். (எ-8)

### பண்ணிசை போட்டி

நெடுந்தீவு,நவ.7

நெடுந்தீவு கோட்டக் கல்வி பிரிவைச் சேர்ந்த பாடசாலைக்கிடையிலான பண்ணிசைப் போட்டிகள் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-111)

### சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,நவ.7

அளவெட்டி கும்பிழாவளை பிள்ளையார் கோயிலில் ஐப்பசி வெள்ளிக்கிழமையையொட்டி இன்று சமகாலச் சைவ சமயமும் நாமும் என்னும் தலைப்பில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு சொற்பொழிவாற்றவுள்ளார். (எ-10)



பருவமழை ஆரம்பித்திருப்பதையடுத்து யாழ். மாநகரசபையினர் வீதி ஓர வாய்க்கால்களை புனரமைக்கும் பணிகளை முடுக்கிவிட்டிருக்கின்றனர். கண்டுக்குளிப் பகுதியில் மாநகர சுத்திகரிப்பு ஊழியர் ஒருவர் இந்தப் பணியில் ஈடுபட்டிருந்த போது....

### கலைப் பேரரசின் ஞாபகார்த்த ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,நவ.7

கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரையின் ஞாபகார்த்த ஒன்றுகூடல் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கம்பன் கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அஞ்சலியுரைகள் இடம்பெறுவதுடன், கலைப் பேரரசு ஞாபகார்த்தமாக நிதியம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட இருக்கிறது. (எ-3)

# சிறுமியின் உயிர்காக்க நிதிஉதவி செய்யுங்கள்



யாழ்ப்பாணம்,நவ.7

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவியான தனபாலசிங்கம் பிரியந்தி (வயது-6) சிறுநீரகம் பாதிக்கப்பட்டதனால் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றார். அவருக்கு அவசரமாகச் சந்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்குப் பெரும் தொகைப் பணம் தேவையாக உள்ளது.

மிகவும் வறிய நிலையில் உள்ள இந்தச் சிறுமியின் தாயார், இரக்க சிந்தையுள்ளவர்களிடம் இருந்து நிதி உதவிகளை எதிர்பார்த்திருக்கின்றார். அவருக்கு உதவ மானிப்பாய் றோட்டறக்ட் கழகம் முன்வந்துள்ளது.

சிறுமியின் வைத்தியச் செலவுக்கான நிதியைச் சேகரிப்பதற்கென மானிப்பாய் றோட்டறக்ட் கழகம் மானிப்பாய் தேசிய சேமிப்பு வங்கியில் கணக்கொன்றைத் திறந்துள்ளது. உதவ விரும்புவோர் 1-0107-01-1075-2 என்ற கணக்கு இலக்கத்துக்கு நேரடியாக வைப்புச்செய்யலாம்.

சிறுமியின் உயிரைக் காப்பதற்கு அனைவரும் முன்வந்து நிதி உதவிகளை வழங்கவேண்டும் என்று மானிப்பாய் றோட்டறக்ட் கழக தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம)

# மட்டு., அம்பாறை மாவட்டங்களில் மழையால் மக்கள் இடம்பெயர்வு

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கடந்த இரு தினங்களாக தொடர்ந்தும் அடைமழை பெய்து வருகின்றது.

இதனால், தாழ்ந்த பகுதிகள் சிலவற்றில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மீனவர்கள் எவரும் இரு நாள்களாக தொழிலுக்குச் செல்லவில்லை. விவசாயிகள் பெரும் போக நெற்செய்கைக்கான ஆரம்ப வேலைகளில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

அரச அலுவலகங்களில் அலுவலர்கள் வரவு குறைவாகவே காணப்படுவதாகவும் - கூறப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் தாழ்நிலப் பகுதிகளான, நிந்தவூர் அட்டாளைச்சேனை, பொத்துவில், அக்கரைப்பற்று, சாய்ந்தமருது, கல்முனை பிரதேசசெயலாளர் பிரிவுகளில் ஏற்பட்டிருக்கும் வெள்ளத்தினால் வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு நிவாரணப் பொருள்களை வழங்குமாறு சமூகசேவை அமைச்சர் ரவீந்திர சமரவீரவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது. (எ-4)

### கருத்தரங்கு

தெல்லிப்பழை,நவ.7

யாழ். மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கத்தால் நடத்தப்படும் கிராமிய உழைப்பாளர்களுக்கான மாதாந்த கருத்தரங்கின் முதலாவது கருத்தரங்கு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிப 2.30 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்க சமாசத் தலைவர் என்.கணேசன தலைமையில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் கிராமிய வறிய மக்கள் எதிர்கொள்ளும் குடியிருப்பு, நிலம் தொடர்பான பிரச்சினைகள் என்னும் தலைப்பில் சங்கத்தின் செயலாளர் ந.இன்பம் உரையாற்றவுள்ளார். (எ-150)

### அகண்ட பஜனை

சத்திய சாயி சேவா நிலையம் நடத்தும் அகில இலங்கை அகண்ட பஜனை நாளை முதல் இருதினங்கள் காலை 6மணி முதல் மாலை 6 மணிவரை திருநெல்வேலியில் அமைந்துள்ள சத்திய சாயி சேவா நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

பஜனை நிகழ்வில் நல்லூர், யாழ்ப்பாணம், கல்வியங்காடு உரும்பிராய் கண்டுக்குளி ஆகிய இடங்களைச் சேர்ந்த பக்தர்கள் கலந்துகொள்வர். (எ-5)

# கையேற்ற மூன்று அமைச்சுக்களையும் ஜனாதிபதி மீண்டும் கையளிக்க வேண்டும்

## அமைச்சரவையில் ஏகமனதாகத் தீர்மானம்

கொழும்பு,நவ.7

ஜனாதிபதி தான் கையேற்ற மூன்று அமைச்சுக்களையும் மீண்டும் அந்த அமைச்சர்களிடம் கையளிக்க வேண்டும் என்ற ஒரு பிரேரணை அமைச்சரவைக் கூட்டத்தில் நேற்றுமுன்தினம ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஐ.தே.க. பிரதித் தலைவரும் அமைச்சருமான கரு ஜயசூரிய இப் பிரேரணையைக் கொண்டுவந்தார்.

அமைச்சரவை அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா கலந்துகொள்ளவில்லை. கருஜயசூரிய கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

ஜனாதிபதி ஒரு தீர்மானத்தை மேற்கொள்கையில் பிரதமரைக் கலந்தாலோசிக்கவேண்டும் என்று சட்டமா அதிபர் தெளிவாகக் கூறியிருக்கிறார். அப்படியிருந்தும் பிரதமரிடம் அறிவிக்காமல் பாதுகாப்பு, உள்துறை, மக்கள் தொடர்பாடல் ஆகிய அமைச்சுக்களை நினைத்தபடி பொறுப்பேற்றது சட்ட விரோத, அரச அமைப்புக்கு முரணான நடவடிக்கையாகும். எனவே, அந்த அமைச்சுக்களை மீண்டும் குறிப்பிட்ட அமைச்சர்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்று அப்பிரேரணை கூறுகின்றது. (எ)

# மாணவனைக் காணவில்லையென ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,நவ.7

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய மாணவன் ஒருவனை நேற்றுமுன்தினம் முதல் காணவில்லையென அவனது உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கண்டுக்குளி, விதர்ஸன் லேனைச் சேர்ந்த, பேனாட் நிலோஜன் (வயது 15) என்ற மாணவனே காணாமல் போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை 5 மணியளவில் பாடசாலை விளையாட்டு மைதானத்திற்கு விளையாடச் செல்வதாகக் கூறிச் சென்ற இம்மாணவன் இதுவரை வீடு திரும்பவில்லையென அவரது மாமனாரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-8)

# கச்சாய் கடல் நீர் ஏரியில் மீனவர்கள் வள்ளத்தில் செல்ல படையினர் அனுமதி

கொடிகாமம்,நவ.7

கச்சாய் கடல்நீர் ஏரியில் வள்ளத்தில் சென்று மீனவர்கள் கடற்றொழில் மேற்கொள்ள படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

கடந்த 7 வருடங்களின் பின்னர் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கச்சாய் மீனவர் சங்கப் பிரதிநிதிகள், உயர்மட்ட படை அதிகாரிகளுடன் பல தடவைகளில் மேற்கொண்ட பேச்சுகளை அடுத்தே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்படி கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் வள்ளங்களில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

இதற்கு முன்னர் மீனவர்கள் படையினரால் அனுமதிக்கப்பட்ட தூரம் வரை கடலில் நடந்து சென்று மீன்பிடிக்க வேண்டியிருந்தது. புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் அனுமதிக்கப்பட்ட தூரம் வரை கட்டுமரத்தில் சென்று மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டது. ஆயினும், கடந்த சில மாதங்களாக நடந்து சென்று மீன்பிடிக்கவே மீனவர் அனுமதிக்கப்பட்டனர். இந்நிலையிலேயே தற்போது வள்ளங்களில் சென்று மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கச்சாய் கடற்கரையோரப் பிரதேசத்தில் 76 மீனவக்குடும்பங்கள் குடியிருக்கின்றன.

தற்போது 8 வள்ளங்கள் மட்டுமே சிறந்த நிலையில் கைவசம் உள்ளதாகவும் -

வள்ளத்தில் சென்று மீன்பிடிக்கக் கூடிய தரமான வலைகள், உபகரணங்கள் மீனவர்களிடம் இல்லை என்றும் - மீனவர் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

பொது நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் தமக்கு உதவ முன்வரவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (ஒ-74)

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்




கர்ப்பம் தரித்து அதிக நாள்களாகி விட்ட பின்னர் கருக்கலைப்புச் செய்வதற்கு அமெரிக்காவில் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிராக கருக்கலைப்புக்கு ஆதரவானவர்கள் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் கருக்கலைப்புக்கு விதிக்கப்பட்ட தடையை ஆதரித்து வெள்ளை மாளிகை அருகே ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

# அடுத்த ஆண்டு ஜூனில் ஆப்கான் தேர்தல்!

ஆப்கானிஸ்தானில் அடுத்த ஆண்டு ஜூன் மாதம் பொதுத் தேர்தல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. தேர்தல் அமைதியாக நடக்க மேலதிக சர்வதேசத்தின் படைகள் அங்கு விரையும்.

ஆப்கானில் தலிபான் ஆட்சி அகற்றப்பட்ட பின்பு ஹமீத் கர்சாய் தலைமையிலான இடைக்கால நிர்வாகசபை ஆட்சியைப் பொறுப்பேற்று நடத்துகிறது.

இந்த இடைக்கால நிர்வாக சபைக்கு எதிராக தலிபான்கள் தாக்குதலை நடத்தி வருகின்றனர். அண்மையில் தலிபான்களின்கை ஆப்கானில் மேலோங்குகிறது என்று ஐ.நா. சபையும் தெரிவித்தது.

இந்நிலையில் அங்கு பொதுத் தேர்தல் நடத்த இடைக்கால நிர்வாக சபை முடிவு செய்திருக்கிறது.

புதிதாகப் பொறுப்பேற்கும் அரசில் பிரதமர் பதவி நீக்கப்படும். ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் சிக்கல் உள்ள நாடுகளை முன் மாதிரியாக வைத்தே பிரதமர் பதவியை நீக்க இடைக்கால நிர்வாகம் தீர்மானித்திருக்கிறது.

இது குறித்து இடைக்கால நிர்வாக சபை அதிகாரி ஒருவர் கூறுகையில் -

பாகிஸ்தானில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே கருத்து முரண்பாடு இருந்து வருகிறது. எனவே, ஆப்கானிஸ்தானில் அமெரிக்கச் சட்டத்தை போல பிரதமர் பதவியை ஒழிக்க திட்டமிட்டுள்ளோம். அதற்கு பதிலாக துணை ஜனாதிபதி பதவி ஏற்படுத்தப்படும்.

தேர்தலை அமைதியாக நடத்தி வல்லமை வாய்ந்த ஆட்சியை ஏற்படுத்த சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பு அவசியம் தேவை. ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய இடைக்காலத் தலைவர் ஹமீத் கர்சாய் போட்டியிடவுள்ளார். இவருக்கு போட்டியாக தற்போதைய இராணுவ அமைச்சர் முகமது காசீம் பக்கீம் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆட்சியை இழந்து தலைமறைவாக உள்ள தலிபான்களினால் தேர்தல் நேரத்தில் பிரச்சினை ஏற்பட நிறைய வாய்ப்புள்ளது. எனவே, சர்வதேச நாடுகள் ஆப்கானிஸ்தானுக்கு படைகளை அனுப்பி பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டும் - என்று அந்த அதிகாரி கூறியுள்ளார் (ஓ)




சீனாவில் கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டம் ஒன்றில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் மோதிக்கொள்ளும் உறுப்பினர்கள்.

# முன்னாள் அமைச்சர்கள் மீது ருவாண்டாவில் விசாரணை

லண்டன்,நவ.7

ஆபிரிக்க நாடான ருவாண்டாவில் இனப்படுகொலைகளில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட 4 முன்னாள் அமைச்சர்கள் மீதான விசாரணைகள் நேற்று ஆரம்பமாகின.

தன்சானிய நகரான அருஷாவின் ஐ.நா.விசாரணைக் குழுவின் முன்பாக இவ்விசாரணைகள் நடைபெறுகின்றன.



ருவாண்டாக் கலவரத்தில் கொல்லப்பட்டவர்களில் ஒரு பகுதியினரின் மண்டையோடுகள்.

1994ஆம் ஆண்டு ருவாண்டாவில் இரண்டு பழங்குடி இனப்பிரிவுகளிடையே கலவரம் மூண்டது. சுமார் 100 நாள்கள் இடம்பெற்ற இனக்கலவரத்தில் 8 லட்சம் பேர் உயிரிழந்தனர். அந்தச் சமயத்தில் இனப்படுகொலைகளில் ஈடுபட்டதாக, அப்போது வெளிவிவகாரம், சுகாதாரம், வர்த்தகம் மற்றும் பொதுநிர்வாகம் ஆகிய துறைகளின் அமைச்சர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. இது தொடர்பான விசாரணைகளே நேற்று ஆரம்பமாகின.

# ஜோர்ஜியத் தலைநகரில் பாதுகாப்பு அதிகரிப்பு

ரிப்ளிசி,நவ.7

ஜோர்ஜியத் தலைநகரில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் சூடு பிடித்திருக்கிறது. நேற்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் பங்குபற்றினர். ஜனாதிபதியையும், அவரது அரசையும் எதிர்த்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் பெரும் கோஷமெழுப்பினர்.

இதனால், தலைநகர் ரிப்ளிசியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. பொலீஸாரும், படையினரும் கலகமடக்குவதற்குத் தயாராக உள்ளனர்.

அரச கட்டடங்களுக்கு முன்பாக படையினர் குவிக்கப்பட்டு, அங்கும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

நாடு வெறிச்சோடியுள்ளதாக அங்குள்ள பி.பி.சி. நிருபர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் மோசடி நடந்தது என்று கூறும் எதிர்க் கட்சிகளே ஆர்ப்பாட்டத்தை நடத்துகின்றன.

ஆளும் கட்சி தேர்தலில் மோசடி செய்ததை சர்வதேசக் கண்காணிப்பாளர்களும் உறுதி செய்துள்ளனர். ஆனால், ஜனாதிபதி எட்வேட் ஷெவாத நாக் இந்த குற்றச்சாட்டை அடியோடு மறுத்துவருகிறார்.

தேர்தல் முடிவுகள் இன்னமும் வெளியிடப்படவில்லை. தொகுதி முடிவுகள் சில எண்ணும் பணி முடிந்துள்ளன. அதன்படி, ஆளுங்கட்சியே முன்னணியில் நிற்கிறது.

ஆளுங்கட்சிக்கு 25 சதவீத வாககுகளும், பிரதான எதிர்கட்சிக்கு 23 சதவீத வாக்குகளும் கிடைத்துள்ளன. எதிர்க்கட்சிக்கு மேலும் சில கட்சிகள் ஆதரவு தெரிவிக்கும் என நம்பப்படுகிறது.

இதனால், ஆளுங்கட்சி ஆதரவாளர்களுக்கும், எதிர்க்கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையே கலவரம் மூளலாம் என்ற அச்சத்தால் தலைநகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# மும்பையில் 'டயானா'வை கண்டார் பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ்!

இந்தியாவில் ஒன்பது நாள் விஜயத்தை மேற்கொண்டிருந்தபோது, பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ் மும்பையில் டயானாவின் தோற்றமுடைய பெண் ஒருவரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

மும்பையில் சுற்றுப்பயணம் செய்த போது அந்தப் பெண்ணைக் கண்டதும் இளவரசர் சாள்ஸ் அசந்துபோனார்.

'டயானா மறுபிறவி எடுத்து வந்திருக்கிறார் என்றே நான் எண்ணுகின்றேன்' என்று அவர் அப்போது கூறினார்.

ஜேர்மனியில் பிறந்த இப்பெண்ணின் பெயர் மார்ட்டினா 40 வயதான இவர், இந்தியப் பத்திரிகையாளரை திருமணம் செய்து மும்பையில் வசித்துவருகிறார்.

இளவரசி டயானா மரணித்தபின், இவரைப் போல் தோற்றமுடைய ஒருவரைக்கண்டு இளவரசர் சாள்ஸ் அசந்து போனது இதுவே முதல் முறை என்று கூறப்படுகிறது.



ஆசியாவிலேயே மிகப்பெரிய குடிசைப்பகுதியாகக் கருதப்படும் மும்பையில் உள்ள தாராவி பகுதியையும் இளவரசர் சாள்ஸ் பார்வையிட்டார்.

அங்கிருந்தவர்களுடன் அரைமணி நேரம் செலவிட்டார். போதிய உணவு இல்லாமல் குடிசைப்பகுதிகளில் வசித்துவரும் சேரி மக்களின் கஷ்டங்களைக் கேட்டறிந்தார்.

50 சதுர மீற்றர் அளவு கொண்ட சிறிய இடத்தில் 9 பேர் வசித்து வருவதைக் கேட்டு ஆச்சரியப்பட்டார். மேலும் சுகாதாரம், மின்சாரம் மற்றும் குடிதண்ணீர் போன்ற அடிப்படை வசதிகள் எதுவுமின்றி இங்குள்ள மக்கள் வசிப்பதைக்கேட்டுத் தெரிந்து கொண்டார்.

இளவரசர் சாள்ஸ் தனது ஒன்பது நாள் இந்தியப் பயணத்தை முடித்துக்கொண்டு நேற்றுமுன்தினம் கிளம்பிச் சென்றார்.

## கிரனேட் வீச்சில் சிறுவன் உட்பட மூவர் ஈராக்கில் உயிரிழப்பு!

பக்தாத்,நவ.7

ஈராக்கில் நேற்று இடம்பெற்ற தாக்குதல் சம்பவமொன்றில் சிறுவன் உட்பட மூன்றுபேர் உயிரிழந்தனர்.

பக்தாத்துக்கு அண்மையில் உள்ள அமெரிக்கப் படையினரின் முகாமருகே இச்சம்பவம் இடம்பெற்றது.

இந்த முகாமின் வாயிலருகே நின்று கொண்டு சிலர் 'கிரனேட்'டுகளை முகாமை நோக்கி வீசியெறிந்ததாகவும் -

ஆனால், கிரனேட்டுக்கள் இலக்குத் தவறி வீதியில் வழ்ந்து வெடித்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

தவறி வீதியில் வீழ்ந்து வெடித்த கிரனேட்டுகளால் சிறுவன் ஒருவன் உட்பட மூன்று பொதுமக்கள் உயிரிழக்க நேரிட்டது.

இத்தாக்குதலுக்கு சதாம் ஹுசைனின் ஆதரவாளர்களே காரணம் என்று தாம் நம்புவதாக ஈராக்கில் உள்ள கூட்டுப்படைகளின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# கொரியப் பெண்கள் மூவர் மீது இந்தியாவில் பாலியல் வல்லுறவு!

## காதல் சின்னம் அருகே கொடூரம்

ஆக்ரா,நவ.7

தென்கொரிய சுற்றுலாப் பயணிகள் மூவர் இந்திய வனத்துறை அதிகாரிகளால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர்.

சுவிஸ் நாட்டுப் பெண் இராஜதந்திரி கடந்த மாதம் புதுடில்லியில் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார். அதற்குமுன், ஜனாதிபதி அப்துல்கலாமின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் மாணவி ஒருவரை வல்லுறவுக்குட்படுத்தினர். இந்த இரு சம்பவங்களும் அங்கு பூதாகரமாகக் கிளம்பியுள்ள நிலையில் மேற்படி சம்பவம் நடந்துள்ளது.

இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட மேற்படி பெண்கள் மூவரும் ஆக்ராவில் தாஜ்மஹால் அமைந்துள்ள பகுதியில் தங்கியிருந்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இவர்கள் மூவரும் அங்குள்ள இடங்களைப் பார்வையிடப் புறப்பட்டனர். அப்போது வனத்துறை அதிகாரிகள் இருவர் இவர்களை அணுகி, தமக்கு இப்பகுதியில் உள்ள அனைத்து இடங்களையும் நன்கு தெரியும் என்றும், விரும்பினால் அனைத்துப் பகுதிகளையும் சுற்றிக் காட்டுவதாகவும் கூறினர்.

இதனை நம்பிய மூன்று பெண்களும், வனத்துறை அதிகாரிகளுடன் காடுகளின் உட்புறத்தில் அமைந்துள்ள மலைப்பகுதிக்குச் சென்றனர்.

அங்கு வைத்தே இவர்கள் மூவரையும் அதிகாரிகள் தமது இச்சைக்கு பலியாக்கினர். பெண்கள் மூவரும் கடுமையான தாக்குதலுக்கு இலக்காகினர்.

இதுகுறித்து, ஆக்ராவில் உள்ள பொலீஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட பெண்கள் மூவரும் முறைப்பாடு செய்தனர். ஆனால் பொலீஸ் அதிகாரி முறைப்பாட்டை ஏற்கமறுத்துத் தெரிவித்தார்.

இதனால், புதுடில்லியிலுள்ள தென்கொரியத் தூதரகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. தூதரக அதிகாரிகள் அரச அதிகாரிகளிடம் முறையிட்டனர். இதனைத்தொடர்ந்து, சம்பந்தப்பட்ட இரண்டு வனத்துறை அதிகாரிகளும் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் மீது கிரிமினல் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

அண்மைக்காலமாக இவ்வாறான சம்பவங்கள் இந்தியாவில் அதிகரித்துள்ளன என்று குற்றஞ்சாட்டியுள்ள தென்கொரிய தூதரகம், மேற்படி சம்பவத்தில் தொடர்புடைய இரண்டு வனத்துறை அதிகாரிகளும் தண்டிக்கப்படவேண்டுமெனக்கூறியுள்ளது.

குறிப்பாக வெளிநாட்டவரைக் குறிவைத்து இந்தியாவில் பாலியல் பலாத்காரம் நடைபெறுவதாக ஐநா. மனித உரிமை அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

உலக அரங்கில்

# பணப்பற்றாக் குறையால் காரை விற்கிறார் ஜக்ஸன்

லொஸ்ஏஞ்சல்ஸ்,நவ.7

உலகப் புகழ்பெற்ற பொப் இசைச் சக்கரவர்த்தி மைக்கல் ஜக்ஸன், பணப் பற்றாக்குறை காரணமாகத் தனது ஆடம்பரக்காரை விற்க முடிவுசெய்துள்ளார்.

இசை நிகழ்ச்சிகளை நடத்தி கோடிக்கணக்கான பணத்தை சம்பாதித்த இவர் அண்மைக்காலமாக நிதிநெருக்கடியில் சிக்கித்தவிக்கிறார்.

அதனால் பல்வேறு நாடுகளில் நடைபெறவிருந்த இசை நிகழ்ச்சிகளையும் இவர் அண்மைக்காலமாக ரத்துச் செய்து வருகிறார். இதனால் இசை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தவர்கள் ஜக்ஸன் மீது வழக்குத்தாக்கல் செய்து வருகின்றனர்.

வழக்கு விசாரணையிலிருந்து தப்பிக் கொள்வதற்காகவே அவர்களுக்கு நிதி நெருக்கடிக்கு மத்தியிலும் பெருமளவு பணத்தை கொடுத்து வருகிறார் இவர். இதனால் இவருக்கு நிதி நெருக்கடி மேலும் அதிகமாயிருக்கிறது. இன்னும் பல வழக்குகள் இவர் மீது நடந்து வருகின்றன.

இதனால் தனது ஆடம்பரக்காரை ஏலத்தில் விற்க இவர் முடிவு செய்துள்ளார். அனைத்து வசதிகளும் கொண்ட அந்தக்காரில் இருந்தபடியே ஜக்ஸன் தன்னுடைய ரசிகர்களுக்கு 'ஓட்டோக்கிராப்' வைப்பார். அப்போது கார் ஏலத்தில் விடப்படும். எதிர்வரும் ஜனவரி 25 ஆம் திகதி இந்தக் கார் ஏலத்தில் விடப்படும். இந்தக் காரின் விற்பனை மூலம் கிடைக்கும் பணத்தை ஜக்ஸன் தனது சொந்தச் செலவுக்கு பயன்படுத்துவார் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஓ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள புதிய **BAJAJ M80** மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு தொடர்பு: 15, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் (சுண்டுக்குளி தபாற்கந்தோருக்கு அருகில்). (24477)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 71ஆம் ஆண்டு பிறந்த, லண்டன் வதிவிட உரிமை உடைய, செவ்வாய் பாவமற்ற, தனியாகத் தொழில்புரியும, எஞ்சினியர் மணமகனிற்குத் தகுதியான மணப்பெண் தேவை. தொடர்பு: விளம்பர இல.2088, மே/பா உதயன். (24456)

## திருமண சேவை

1971இல் பிறந்த, பூரட்டாதி நட்சத்திரம, 2இல் செவ்வாய், **B.Sc.** விரிவுரையாளருக்கு பட்டதாரி தரத்தில் உத்தியோக, சைவ மணமகன் தேவை. உள்ளூர், வெளியூர் மணமக்களுக்கு தொடர்பு: துரைவிமலா இலகு திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (24460)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, சைவபோசன மணமக்கள் எம்மிடம் உள்ளனர். ஜாதகம், புகைப படத்துடன் தொடர்புகொள்ளவும். **Sai marriage Private Services, Chulipuram Center, Chulipuram.** (24478)

## தேவை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள தேவை. தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (24475)

## ஆளி தேவை

**எமது ஸ்தாபனத்துக்கு விற்பனையாளர் தேவை. முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொடர்பு:**

**டிலக்சன் மோட்டோர்ஸ்**
113, ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்.
(35-19-16-21) (24463)

## ஆலய பூசகரின் மோ.சைக்கிள் திருட்டு

தெல்லிப்பழை,நவ.7

ஆலய முன்றிலில் தரித்து விடப்பட்ட பூசகரின் மோட்டார் சைக்கிள் களவாடப்பட்டது. இச்சம்பவம் ஏழாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

ஏழாலை கருணாகரப்பிள்ளையார் ஆலய அர்ச்சகரின் மோட்டார் சைக்கிளே திருடப்பட்டுள்ளது. மாலை 5 மணியளவில் ஆலயப் பூசைக்காக மேற்படி ஆலயத்திற்கு வந்தபோது தனது யமஹா 50 மோட்டார் சைக்கிளை ஆலய முன்றிலில் தரிக்க விட்டுள்ளார். பூசைமுடிந்து வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிள் களவாடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பூசகர் சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (ம-150)

## ஆறுமுகநாவலர் குருபூசை தின போட்டிகள்

வழமைபோல இவ்வருடமும் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் ஆறுமுகநாவலர் குருபூசை தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே பேச்சு, கட்டுரைப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பேச்சுப்போட்டிகள் கீழ்ப்பிரிவு (தரம 6,7,8), மத்தியபிரிவு (தரம் 9,10,11), மேற்பிரிவு (தரம் 12,13) என மூன்று பிரிவுகளாகவும் -

கட்டுரைப்போட்டி 12ஆம் 13ஆம் தர வகுப்பு மாணவர்களிடையேயும் நடத்தப்படவுள்ளன.

இவ்விரு போட்டிகளுக்குமான விண்ணப்பங்களை எதிர்வரும் 9ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்குமாறும் -

எதிர்வரும் 16ஆம் திகதி காலை 9 மணிக்கு வண்ணார்பண்ணை நாவலா மகா வித்தியாலயத்தில் பேச்சுப் போட்டியும் 30ஆம் திகதி கட்டுரைப் போட்டியும் நடைபெறும் எனவும் - சைவ பரிபாலன சபையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-152)

# வாகனங்களின் திடீர் அதிகரிப்பினால் அச்சுவேலி பஸ் நிலையத்தில் நெருக்கடி

சமாதான சூழல் ஏற்பட்டு அமைதி நிலை தொடர்வதால் யாழ். குடாநாடுக்கு அதிகளவான வாகனங்கள் வந்துள்ளன.

இவ்வாறு வாகனங்கள் அதிகரித்துள்ளதால் அச்சுவேலி பஸ் நிலையத்தில் பெருமளவில் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

பஸ் நிலையத்தின் உள்ளே அதிகளவில் மினிபஸ்களும், ஓட்டோக்களும் தரித்து நிற்கின்றன. இதனால் வழித்தட போக்குவரத்தில் ஈடுபடும் போக்குவரத்துச் சபை பஸ்கள் உட்பட வாகனங்கள் பஸ் நிலையத்தினுள் செல்ல முடியாத நிலை ஏற்படுகின்றது. நிலையத்துக்கு வெளியே வீதியோரமாகவே பயணிகளை ஏற்றி இறக்கும் நிலை ஏற்படுகின்றது.

வழமையாக பஸ் நிலையத்துக்கு பருத்தித்துறையிலிருந்து வரும் வடபிராந்திய போக்குவரத்துச்சபை பஸ்கள் நிலையத்தின் மேற்குப் பகுதியில் பிரதான வீதி ஓரமாகவும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட ஏனைய இடங்களிலிருந்து வரும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகள் பஸ் நிலையத்தின் கிழக்குப் புறமாகவும் தரித்து பயணிகளை ஏற்றி இறக்கி வந்தன.

தற்போது பஸ் நிலையத்தில் மினி பஸ்களும், ஆட்டோக்களும் தரித்து நிற்பதால் இரு வழியாக (பருத்தித்துறை - யாழ்ப் பாணம்) வந்து செல்லும் பஸ்களும் பிரதான வீதியின் இரு மருங்கிலும் தரித்து நின்று செல்கின்றன.

பஸ்நிலைய தங்கு மண்டபத்தில் அமர்ந்திருக்கும் பயணிகள் பஸ் வண்டிகளைக் கண்டதும் வீதியைக் கடந்து சென்று பயணத்தை தொடர வேண்டிய சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். இதனால் விபத்துகள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகரிப்பதாகவும சுட்டிக்காட்டப்படுகின்றது. (ம-173)



உலக உணவு தினத்தை முன்னிட்டு காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவில் மரநடுகைத் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை வளாகத்தில் நிர்வாக உத்தியோகத்தர் பொன். பாலசிங்கம் தலைமையில் மரநடுகைத் திட்டம் தொடக்கி வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம். (படம்: காரைநகர்ச் செய்தியாளர்)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் (சுன்னாகம், உடுவில், ஏழாலை உப அலுவலகப் பகுதிகள்) கட்டடங்கள், சுற்றுமதில்கள், மலசல கூடங்கள் என்பவற்றைப் புதிதாகக் கட்டுதல், பழைய கட்டடங்களைப் புதுப்பித்தல் போன்ற சகல கட்டடவேலைகளையும் பிரதேச சபையின் அங்கீகாரம் பெற்றபின்பே ஆரம்பிக்கப்படல் வேண்டும். தவறுவோர் மீது 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேசசபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 41(2) இற்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

வலி தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
2003.11.05. (C/31161) (34)

திருமதி.ச.சொக்கலிங்கம்.
செயலாளர்,
வலிதெற்கு பிரதேச சபை.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**பொன்னையா தங்கம்மா**
திதி: சதுர்த்தசி

மூன்று ஆண்டுகள் என்ன முப்பது ஆண்டுகள்
சென்றாலும் மறவோம் உங்களை.
*என்றும் உங்கள் நினைவுடன் வாழ்கின்றோம்.*

**இன்று (07.11.2003) வெள்ளிக்கிழமை எமது தாயாரின் 3ஆம் ஆண்டுத் திவசம் எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.**

"சசி அகம்",
*புலோப்பளை,*
*பளை.*
(24311) (34-15-19-21)

தகவல்:
பொ.பரமசாமி குடும்பம்
(மகன்).

## மனமார பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். கொழும்புத்துறை வீதி.
பாண்டியந்தாழ்வு.
அருள்மிகு நரசிங்க வைரவர்
தேவஸ்தான ஸ்தாபகர்
அமரர் **செ.சுப்பிரமணியத்தின்**
ஏக புதல்வர்
உயர்திரு.
**சு.இரத்தினசிங்கம்**

அவர்கள் 04.11.2003 அன்று யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்த சேகரன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

மிகவும் கஷ்டமான காலத்தில் நாம் வாழ்ந்தபோது பாண்டியந்தாழ்வு மக்களின் நன்மைகருதி விழிப்புக்குழு ஒன்றையும் அதன் பின் ஐக்கிய நாணய சங்கத்தையும் ஸ்தாபித்த பெருமை இவருக்கே உரியதாகும்.

தவிர, இடம்பெயர்ந்து அகில இலங்கை இந்து மாமன்றம் கொழும்பு கட்டடக்குழு செயலாளராக கடமை ஆற்றியகாலத்தில், கொடிய யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, அரசியல் பிரமுகர்கள் சிலரைச் சந்தித்து மக்கள் படும் சொல்லொணா துன்ப துயர வாழ்க்கையை எடுத்துரைத்து, பட்டினிச் சாவில் இருந்து காப்பாற்றிய புண்ணியவாளரை நாம் எல்லோரும் அகமகிழ்ந்து, இவரது தளராத சேவைக்கு கிடைத்த பதவியை பெருமகிழ்ச்சியுடன் மனமுவந்து பாராட்டி வாழ்த்துவதோடு, இவரது பணி மேலும் மேலும் சிறக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அவரும் அவரது குடும்பமும் மேலோங்க வாழ வாழ்த்துவோர்:

※M.R.ஜெயதரன் (கிராமசேவையாளர் J/50 பருத்தியடைப்பு) M.R.J.தாரணி } குடும்பம்
※சி.விஸ்வலிங்கம் (இல.வ.போ.சபை) வி.தாரணி } குடும்பம்
※K. சிவகாந்தன் (சமுர்த்தி உத்தியோகத்தர், திருநெல்வேலி) சி.பாலா } குடும்பம்
※கா.திருநீலகண்டன் (பிரபல வர்த்தகர், பாண்டியந்தாழ்வு) தி.இந்திரா } குடும்பம்

(24467) (25)

## மரண அறிவித்தல்

**சோமசுந்தரம் சுந்தரலிங்கம்**
**(நயினாதீவு)**

நயினாதீவு, 5A, வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சுந்தரலிங்கம் 4.11.2003 அன்று கொழும்பில் காலமானர்.

அன்னார் சோமசுந்தரம் - தவமணி (பிரான்ஸ்) தம்பதிகளின் அன்பு மகனும் இராசரத்தினம் - பரிமளம் தம்பதியினரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் (ஆசிரியை சரவணை சின்மடு றோமன் க.த.க.பாடசாலை) அன்புக் கணவரும் சுரேக்கா, சாம்பவி (மாணவிகள், ஆனைப்பந்தி அமெரிக்கன் மிசன் த.க.பாடசாலை), கார்த்திகேயன், கஸ்தூரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகேஸ்வரி (பிரான்ஸ்), சங்கரலிங்கம் (கனடா), நாகேஸ்வரி (பிரான்ஸ்), இராசலிங்கம் (கனடா), விக்கினேஸ்வரி (பிரான்ஸ்), மகாலிங்கம் (பிரான்ஸ்), சுந்தரேஸ்வரி (சுவிஸ்), பஞ்சலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருச்செல்வம் (பிரான்ஸ்), அருளாலினி (கனடா), ரஞ்சலிங்கம் (பிரான்ஸ்), கண்ணகிதேவி (கனடா), கோணேஸ்லிங்கம் (பிரான்ஸ்), மோகனதாஸ் (சுவிஸ்), காலஞ்சென்ற இராசகுமார், மகேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கதிரவேற்பிள்ளையின் (ஜேர்மனி) சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.11.2003 ஞாயிற்றுக்கிழமை 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

86, சின்னவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம். (24473)(35-21-15-19)

தகவல்
சொ.சங்கரலிங்கம்
(சகோதரன்)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

## ஜெயசீலன் ஆகாஷ் HAPPY BIRTHDAY



மானிப்பாயைச் சேர்ந்த
ஜெயசீலன் - துஜிதா
தம்பதிகளின் அருந்தவப் புதல்வன்
**செல்வன் ஆகாஷ்**

இன்று (07.11.2003) வெள்ளிக்கிழமை தனது முதலாவது பிறந்தநாளை ஜேர்மனியிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அண்ணா (ஜேர்மனி), அம்மம்மா, மாமாமார் (ஜேர்மனி), அம்மம்மா, தாத்தா, மாமாமார் (ஜேர்மனி), பாட்டாமார், பாட்டிமார், தாத்தாமார், அம்மம்மாமார், மாமாமார், அன்ரிமார் (மானிப்பாய்), அப்பப்பா குடும்பம் (மட்டக்களப்பு), தாத்தா குடும்பம் (லண்டன்), தாத்தமார் குடும்பம் (பகறின்), தாத்தா குடும்பம் (லெபனான்) மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சிறிமுத்துமாரி அம்மன் ஆசியுடன் சீரும் சிறப்புடன் பல்கலைகளும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

**திருமதி விஸ்வலிங்கம் தங்கம்மா**
(பாட்டி) மானிப்பாய்.

(24470) (26-16-19-21)

உதயன்

# ஜனாதிபதியின் அடுத்த கட்ட நடவடிக்கைதான் என்ன?

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் கைகளிலிருந்த மூன்று முக்கிய அமைச்சுப் பதவிகளைப் பிடுங்கிக் கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அதை யடுத்து அதிரடி நடவடிக்கையாக அவசரகாலச் சட் டத்தைப் பிரகடனப்படுத்தியிருக்கிறார்.

அவரது அடுத்த நடவடிக்கை என்ன என்பதுதான் இப்போதுள்ள கேள்வி.

அதேபோன்று, தனது அரசின் முக்கிய மூன்று அமைச்சுப் பதவிகளைப் பறிகொடுத்து, இப்போதைய கட்டத்தில் 'நொண்டிக் குதிரை' போன்ற நிலையிலான அரசைத் தக்கவைத்திருக்கும் பிரதமர் ரணில் விக் கிரமசிங்க இன்று நாடு திரும்பிய பின்னர் இனி என்ன செய்யப் போகின்றார்? என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றார்? இப்படியான கேள்விகளும் கிளம்பாமல் இல்லை.

நாட்டின் தேசியப் பிரச்சினையை - பாதுகாப்புப் பிரச்சினையை - கருத்திற்கொண்டே இந்த மூன்று அமைச்சுக்களின் பொறுப்பையும் தாமே ஏற்றுக்கொண் டார் என ஜனாதிபதி நாட்டுமக்களுக்குத் தாம் ஆற்றிய உரையில் தெரிவித்திருக்கின்றார்.

'தேசியப் பாதுகாப்புப் பிரச்சினை' என்று குறிப் பிட்டதும் இதே விடயத்தை ஒட்டி சில வாரங்களுக்கு முன்னர் ஜனாதிபதியின் தரப்பில் அவரும் அவரது பிரதான ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் உட்பட ஏனையோரும் தெரிவித்த சில கருத்துகள் மக்களின் மனதில் நிழலாடுகின்றன.

தற்போதைய யுத்தநிறுத்தச் சூழ்நிலையையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் பயன்படுத்தி திரு கோணமலைக் கடற்படைத்தளம், திருகோணமலை துறைமுகம் ஆகியவற்றைச் சுற்றிவளைத்து புதிய பல இராணுவத் தளங்களை - முகாம்களை - புலிகள் அமைத்திருக்கின்றனர் என்றும் -

அரசு அதுகுறித்து நடவடிக்கை எடுக்காமல் வாளாவிருப்பதால் திருகோணமலையின் பாதுகாப் புக்கே அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கின்றது என்றும் -

ஜனாதிபதியும் அவரது அணியினரும் எடுத்த எடுப் பில் ஆட்சேபனையும் எச்சரிக்கையும் கிளப்பி வந்தனர். ஆனால், அது குறித்து ரணிலின் அரசு பெரிதாக ஒன் றும் வெட்டிக் கிழிக்கவில்லை. புறக்குடத்து நீராக அந்தச் சத்தங்கள் வீணாகின.

இந்தச் சூழ்நிலையில் இவ்விடயங்களைக் கையா ளக் கூடிய பாதுகாப்பு அமைச்சு, உள்துறை அமைச்சு போன்றவற்றை ஜனாதிபதி தமது கையில் எடுத்திருக் கின்றார். அத்தோடு, ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரங்களும் முப்படைகளின் பிரதம தளபதி என்ற வலுவும் அவர் கைகளில் ஏற்கனவே உள்ளன. அவற்றை உறுதிப்படுத்தும் தீர்மானம் ஒன்றை உயர் நீதிமன்றமும் வழங்கி அவரது கையை மேலும் பலப் படுத்தியிருக்கிறது.

போதாக்குறைக்கு அவசரகால நிலையை அதிரடி யாகப் பிறப்பித்து அதன் மூலமும் மேலதிக அதிகாரங் களைத் தனக்குக் கீழ் இருக்கும் படையினருக்கும் பொலீஸாருக்கும் பெற்றுக்கொடுத்திருக்கின்றார் ஜனா திபதி.

இவ்வளவும் செய்த பின்னர் - இவ்வளவு அதிகா ரங்களையும் வலுவையும் கையிலெடுத்துத் தன்னைப் பலப்படுத்திக் கொண்ட பின்பு - தேசியப் பாதுகாப்புக் குறித்து ஜனாதிபதி எடுக்கப்போகும் அடுத்த நட வடிக்கை என்னவென்பதே பலரது எதிர்பார்ப்பாகும்.

முக்கியமாக திருகோணமலைத் துறைமுகம், கடற் படைத்தளம் ஆகியவற்றுக்கும் அதன்மூலம் தேசியப் பாதுகாப்புக்கும் மிகப் பெரிய அச்சுறுத்தல் என்று திரும்பத்திரும்ப அவர் குரல் எழுப்பியிருந்த குரங்கு பாஞ்சான் முகாம் விவகாரத்தில் அவரது நடவடிக்கை எப்படி அமையப்போகின்றது என்பதே கேள்வியாகும்.

திருகோணமலை நிலைமை குறித்தும் குரங்குபாஞ் சான் போன்ற புலிகளின் முகாம்கள் குறித்தும் திரும் பத்திரும்பத் தென்னிலங்கை மக்கள் மனதில் பல சந்தேகங்களைக் கிளப்பும் விதத்தில் கருத்துக்களை விதைத்து வந்த ஜனாதிபதியும் அவரது தரப்பினரும் இப்போது அவ்விவகாரங்கள் தொடர்பான பதவி களையும் அதிகாரங்களையும் ஜனாதிபதி கையிலெ டுத்துள்ள நிலையில், அவ்விடயங்கள் குறித்துத் தீர்க்கமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற எதிர் பார்ப்பு தெற்கில் வளர்ந்து வருகின்றது.

ஜனாதிபதி எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன?

தேசிய நலனின் பெயரில் அமைச்சுப் பறிப்பு, புதிய அதிகாரிகள் நியமனம், அவசரகால நிலைமைப் பிர கடனம் என்ற வரிசையான நடவடிக்கையை எடுத்த ஜனாதிபதி இனி என்ன செய்யப்போகின்றார்?

தெற்கைச் சமாளிக்க அவர் எடுக்கக்கூடிய நட வடிக்கை சமாதானச் சூழ்நிலைக்கு ஒரே ஆப்பாக இறங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# காலத்தின் பதிவு



விடா முயற்சி... படம் : பிரேம்

# மருதங்கேணி மீனவர் அபிவிருத்திக்கு நிக்கொட் அமைப்பு ரூ.3 கோடி நிதியுதவி

யாழ்ப்பாணம்,நவ.7

மருதங்கேணி கடற்றொழிலாளர் சமாசத்திற்கு உட்பட்ட 15 கடற்றொழிலாளர்கள் சங்கங்களைச் சேர்ந்த மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் நிக்கொட் அமைப்பு 3 கோடி ரூபா நிதி உதவியை வழங்கவுள்ளது. இந்த நிதி மூலம் மீனவர்களுக்குத் தேவையான கடற்றொழில் உப கரணங்கள் கடனடிப்படையில் வழங்கப்படும்.

கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஜோசப் இதனைத் தெரிவித்தார்.

ஐ.நா. அபிவிருத்தித்திட்டத்தின் (யு.என்.டி.பி.) அனுசரணையு டன் இந்த நிதி உதவிகளை வழங்குவதற்குரிய பூர்வாங்க வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரி வித்தார்.

நிக்கொட் வழங்கும் நிதி உதவியில் இருந்து 15 கடற் றொழிலாளர் சங்கங்களுக்கும் தலா 20 லட்சம் ரூபா வீதம் வழங்கப்படும். இந்த நிதி மூலம் சங்க உறுப்பினர்களுக்கு படகுகள், இயந்திரங்கள், வலைகள் மற்றும் தேவையான உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

ஒரு பயனாளிக்கு ஒரே தடவையில் குறைந்தபட்சம் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்படும். பின் னர் சுழற்சி முறையில் ஏனைய தேவையான பொருள்கள் வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதற்குரிய பூர்வாங்க வேலை களை மேற்கொள்வதற்கான கலந்துரையாடல் கடந்த திங் களன்று வடமராட்சி கிழக்கு தாளையடியில் இடம்பெற்றது. (ம-7)

# கொழும்பு கம்பன் கழகத்தின் ஸ்ரீராமநாம கானாமிர்தம்

கொழும்பு,நவ.7

கொழும்பு கம்பன் கழகம் நடத்தும் 'ஸ்ரீராம நாம கானாமிர் தம் இசை வேள்வி' நிகழ்வு எதிர்வரும் 10 ஆம் திகதிமுதல் 17 ஆம் திகதிவரை தினமும் மாலை 5 மணி தொடக்கம் கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெற விருக்கின்றது.

இந்த நிகழ்வில் முதலாம் நாள் திங்கட்கிழமை நாதஸ் வர வித்துவான்களான எம்.பஞ்சாபிகேசன், எம்.பி. நாகேந்திரம் ஆகியோரது நாதஸ்வர இசையும், தமிழ் நாட்டைச் சேர்ந்த திருமதி பூஷணி கல்யாணராமனின் இசை நிகழ்ச்சியும் இடம் பெறவுள்ளன.

இரண்டாம் நாள் செவ்வாய்க்கிழமை திருமதி சுப்புலட்சுமி சச்சிதானந்தன், தமிழ்நாட்டைச் சேர்ந்த ரி.வி.சங்கரநாராயணன் ஆகியோரது இசை நிகழ்வுகள் இடம்பெறும்.

மூன்றாம் நாள் புதன்கிழமை ரி.கருணாகரன் தமிழ்நாட் டைச் சேர்ந்த சஞ்சய் சுப்பிரமணியம் ஆகியோரின் இசை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

நான்காம் நாள் வியாழக்கிழமை சி.அகிலன், மதுரை ஜீ.எஸ்.மணி ஆகியோரின் இசை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

ஐந்தாம் நாள் வெள்ளிக்கிழமை திருமதி மேரி சரோஜா ஜஸ்டின், நெய்வேலி ஆர்.சந்தனகோபாலன் ஆகியோரின் இசை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

ஆறாம் நாள் சனிக்கிழமை எஸ்.சம்பத்தின் வீணைக் கச்சேரி யும், தமிழ்நாட்டைச் சேர்ந்த திருமதி சுதா ரகுநாதனின் பாட்டுக்கச்சேரியும் இடம்பெறும்.

ஏழாம் நாள் ஞாயிற்றுக்கிழமை எஸ்.றொபேட், தமிழ்நாட் டைச் சேர்ந்த திருமதி பம்பாய் ஜெயஸ்ரீ ஆகியோரின் இசை நிகழ்வுகள் இடம்பெறும்.

அன்றையதினம் மாலை 6 மணிக்கு மறைந்த இசைக் கலைஞர்களான என்.கே.பத்மநாதன், ரி.வி.பிச்சையப்பா, பி.எஸ். பிச்சையப்பா, ந.வீரமணிஐயர் ஆகியோரது திருவுருவப்படங் கள் திரைநீக்கம் செய்யப்பட்டு அஞ்சலி செலுத்தப்படவுள் ளது. எதிர்வரும் 17 ஆம் திகதி இடம்பெறும் இறுதிநாள் நிகழ் வில் செல்வி பரமேஸ்வரி கணேசன், மதுரை ரி.என்.சேஷகோபா லன் ஆகியோரின் இசைக்கச்சேரிகள் இடம்பெறவுள்ளன.(ஒ-4)

# பட்டாசு கொளுத்தியபோது அது வெடித்து குடும்பஸ்தர் காயம்

பட்டாசு கொளுத்தி விளையாடிய சமயம் அது கையிலி ருந்தபோதே வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் தனது வலது கண்ணில் காயமடைந்தார்.

பருத்தித்துறையில் கடந்த திங்களன்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஓடக்கரையைச் சேர்ந்த கதிரவேலு தங்கவேல் (வயது 47) என்ற நபரே காயமடைந்தார்.

இதேவேளை - மல்லாகம் பகுதியில் இரும்புக் குழாயினுள் வெடிமருந்தை அடைத்துவைத்து கொளுத்திப் பார்க்க முயன்ற போது அது வெடித்து ஏற்பட்ட விசையின் உந்தலால் குழா யின் பின் பகுதியிலிருந்து வெளி யேறிய அடைப்பான் தாக்கி இளை ஞர் ஒருவர் காயமடைந்தார்.

திங்களன்று இடம்பெற்ற இந் தச் சம்பவத்தில் கருணாநிதி சுகிர்தன் (வயது 15) என்பவர் படுகாயமடைந்தார்.

காயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-6-15)

## நாளை

ஐப்பசி 22
சனிக்கிழமை
(08.11.2003)
திதி : பூரணை
முழுவதும்
நட்சத்திரம்: அச்சுவினி
பிற்பகல் 1.44 வரை
சுபநேரம்: 3.05-4.35
ராகுகாலம்: 09.05-10.35
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

கூட்டங்களையும் விவாதங் களையும் விட்டு விலகியிருப்பவ னிடம் நிம்மதி நெருங்கிவரும்.

# 5 வருடங்களுக்கு மேல் பணிபுரியும் அரச ஊழியர்களுக்கு இடமாற்றம்

தென்மராட்சி,நவ.7

யாழ். மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் அலுவலகங்கள் ஆகியவற்றில் ஐந்து வருடங்களுக்கும் மேலாக கடமையாற்றிய இணைந்த சேவை களைச் சேர்ந்த எழுதுநர்கள், தட்டெழுத்தாளர்கள், சுருக்கெழுத் தாளர்கள், சிறாப்பர்கள், கணக்குப் பதிவாளர்கள். களஞ்சியப் பொறுப்பாளர்கள் மற்றும் சிற்றூழியர் தரத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியோருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டுக்கான இடமாற்றப் பட்டியல் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனால் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இந்த இடமாற்றங்கள் 2004 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்குக் கொண்டு வரப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனைப் பிரிவுக்குட்பட்ட ஆஸ்பத் திரிகளில் ஐந்து வருடங்களுக்கு மேல் கடமையாற்றும் சிற்றூழியர்களும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

முதல் கட்டமாக ஆஸ்பத்திரிகளில் பரிசாரகர்களாகக் கடமையாற்றுவோருக்கான இடமாற்றப் பட்டியல் பிரதி மாகா ணப் பணிப்பாளர் டாக்டர் க.தா.சிவபாதத்தால் ஆஸ்பத்திரி களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றங்களும் 2004 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள் ளது. (ஒ-117)

## மாதிரி வினாத்தாள் இலக்கம் 3 விடைகள்

**வினாத்தாள்-1**

1. 2 2. 1 3. 3
4. 4 5. 2 6. 4
7. 3 8. 3 9. 2
10. 3 11. 2
12. தமிழ், உடற்கல்வி.
13. அழகியல்.
14. நிவேதிகா. 15. 5
16. 1 17. 2 18. 4
19. 2 20. 4
21. இல்லை. 22. ஆம்.
23. இல்லை. 24. 3
25. 3 26. 2 27. 2
28. 3 29. 3 30. 2
31. 1 32. 2 33. 3
34. 20 35. 8 36. 49
37. 21
38. அதிக உரம் உபயோகிக்க வேண்டும்.
39. தாவர பட்சணி.
40. கண்காட்சியாகும்.

*40x2½=100புள்ளிகள்*

**வினாத்தாள்-2**

01. கொக்கு. 02. கல்லில்.
03. வெள்ளை.
04. கொக்கு/மீன்/கல்/கோபம்/வெள்ளை.
05. ஓடி/பாய்ந்து/வந்து/துள்ளி.
06. விழுந்த. 7. துள்ளித்துள்ளி.
08. சினம். 9. சேய்மை.
10. கறுப்பு. 11. வந்தது.
12. பறக்கின்றது.
13. மீன்களைக் கொத்தப் பார்த்தன.
14. குஞ்சு. 15. பார்த்தது.
16. அ. இஸ்லாமியர்.
 ஆ. திருக்குர் ஆன்.
 இ. 1. ரம்ழான்.
  2. ஹஜ்.
17. அ. இந்துக்கள்.
 ஆ. வேதசிவாகமம்.
 இ. 1. தீபாவளி.
  2. நவராத்திரி.
18. அ. கிறிஸ்தவர்கள்.
 ஆ. பைபிள்.
 இ. 1. நத்தார்.
  2. ஈஸ்டர்.
19. அ. பௌத்தர்கள்.
 ஆ. திரிபீடகம்.
 இ. 1. வெசாக்.
  2. பொசன்.
20. வீதி திருத்த வேலை முன்னால்.
21. முன்னால் ஒளிச் சமிக்ஞை.
22. முன்னால் இடப்பக்க வளைவு.
23. முன்னால் பாதசாரிகள் கடவை.
24. கிராமியப்பாடல்கள்.
25. தாளவாத்தியங்கள்.
26. பாட்டுவாத்தியங்கள்.
27. பல்லியம்.
28. வாத்திய இசை.
29. ✗ 30. ✓ 31. ✓
32. ✓ 33. ✗ 34. ✓
35. ✗ 36. ✗ 37. ✗
38. ✓ 39. 240km.
40. 346km. 41. 344km.
42. வடமேற்கு. 43. பசுவுக்கு.
44. கிழக்கு. 45. மேற்கு.
46. தெற்கு. 47. வீடு.
48. இலையான்(ஈ).
49. தும்பி. 50. வெட்டுக்கிளி.
51. FLOWERS.
52. UMBRELLA.
53. VILLAGE.
54. GARDEN.
55. மரங்கள்.
56. மிருகக்காட்சிச்சாலை.
57. இரவு.
58. வண்ணத்துப்பூச்சி.
59. நீர்ச்சில்லு.
60. நீரின் இயக்க சக்தி மூலம்.
61. மின்சாரத்தை.
62. நீரின் வேகத்தை அதிகரித்தல் தட்டுக்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
63. அலுமினியம்.
64. வேம்பு. 65. யூரியா.
66. இறப்பர். 67. கண்ணாடி.
68. XXIX. 69. 1.3, 0.7, 0.5, 0.25
70. $\frac{7}{8}$ 71. ஐந்து ரூபா.
72. கோளம்.
73-78 பொருத்தமான கருத்துடைய வசனங்கள்

**புள்ளித் திட்டம்:-**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 - 15 | ⇨ | 15 | புள்ளிகள். |
| 16 - 19 | ⇨ | 16 | புள்ளிகள். |
| 20 - 38 | ⇨ | 19 | புள்ளிகள். |
| 39 - 67 | ⇨ | 29 | புள்ளிகள். |
| 68 - 71 | ⇨ | 8 | புள்ளிகள். |
| 72 | ⇨ | 1 | புள்ளிகள். |
| 73 - 78 | ⇨ | 12 | புள்ளிகள். |
| | | 100 | |


## சேவை

அமெரிக்காவில் சட்டபூர்வமாக உழைத்துவாழ Green Card Lottery இல் பங்குபற்றுங்கள். விபரங்களுக்கு 0777 871817 தொலைபேசி எண்ணிற்கு அழையுங்கள்.

பாலா
தெஹிவளை.


# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு 02 - 01 - 1931
உதிர்வு 20 - 10 - 2002

அமரர்
## கந்தையா இரத்தினம்

திதி: 07-11-2003


அமரராகி விட்ட எங்கள் ஆருயிர் பெருமகனே!
அன்பின் திருவுருவே! பாசத்தின் ஒளிச்சுடரே!
எம்மில் அனைத்துமாய் நிலைபெற்று ஆதரித்து
சீராய் சிறப்பாய் வாழவைத்த தெய்வமே!
குடும்பத்தின் கோபுரமாய் ஒளிச்சுடராய்
பிரகாசித்து எமைவிட்டுப் பிரிந்து ஒரு வருடங்கள் ஆகிவிட்டன.
இதய தெய்வமாய் என்றும் வீற்றிருந்து துணைபுரிந்தீரே!
என்குறை என் அன்புக் கணவர் பிரிந்ததுவே.
அப்பா! எப்பிறப்பு எடுத்தாலும் அப்பிறவியெல்லாம் உங்கள்
"சாந்தியே" ஒளி என உணர்வினால் கண்டு
உங்கள் எதிர்பார்ப்புகளுக்கு இணங்க
எம்மால் இயன்ற வரை வாழ்வோம்.
*உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்*

*நீங்காத நினைவுடன்:*
**அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

திருமதி இ. அன்னலட்சுமி,
*பருத்தியோலை,*
*சுன்னாகம்.*

(24466) (26-21-15-19)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 27 - 04 - 1959
மறைவு 24 - 09 - 2003

## அமரர் சண்முகம் பாலசுந்தரம்
(சிவராசா)

**அன்புடனும் பண்புடனும் அகிலத்தில் வாழ்ந்தீர்!**
உங்கள் ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகிறோம்.

எமது குடும்ப விளக்கு அணைந்த செய்திகேட்டு நேரில் வந்து அனுதாபந் தெரிவித்தோருக்கும் தபால், தொலைபேசி மூலம் ஆறுதலும், தேறுதலும் கூறியோருக்கும் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டு பல வழிகளிலும் உதவியோர்க்கும் மற்றும் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன், இன்று (07.11.2003) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*வரணி வடக்கு,*
*வரணி.*

- குடும்பத்தினர்.

(24397) (34-21-15-19)

## காணி விற்பனைக்கு

கிராம்புவில், சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி முதலாம் கட்டை வீதியில் 5½ பரப்புக் காணி சேதமுற்ற வீடு, கிணறு, மலசலகூடம் என்பனவற்றுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
**பொ. அருந்தவமலர்**
கிராம்புவில், சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.

சந்திப்பு நேரம்:
காலை 6.00மணிக்கும் 8.30 மணிக்கும் இடையில்.

(24447)(34-15-19)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 22 - 04 - 1930
மறைவு 08 - 10 - 2003

அமரர் **பொன்னம்பலம் பொன்னுத்துரை**
(சிறைச்சாலை ஓய்வுபெற்ற ஓவசியர்)
திதி: சதுர்த்தசி 07.11.2003

அன்பின் திருவுருவே! அமைதியின் அருள்வடிவே!
மின்னல் போல் வாழ்ந்து விரைந்து விட்டீரோ?
நீண்ட தூரம் நீங்கள் சென்று விட்டாலும்
உங்கள் நினைவுகள் எம் மனதில் இருந்து
என்றுமே மாறவில்லை.

அமரரின் ஆத்மசாந்தி நிகழ்வு இன்று (07.11.2003) வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்புடன்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"பள்ளஞ்சீமா",
*ஏழாலை மேற்கு, ஏழாலை.*

(C31100) (34-15-19-21)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



மலர்வு 22 - 06 - 1927
உதிர்வு 08 - 10 - 2003

## அமரர் காசிநாதர் கனகரத்தினம்

அன்பையெல்லாம் சொரிந்து எம்மை அரவணைத்து
வழிநடத்திய எம், குடும்ப தீபமே!
மாதம் ஒன்று மறைந்து போகினும்
மறக்கமுடியவில்லை உம்மை இங்கு.

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக!

08.10.2003 அன்று இறைவனடிசேர்ந்த எமது குடும்பத் தலைவரின் நினைவஞ்சலியும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (07.11.2003) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவனர், நண்பர்கள் அனைவரையும் இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்,

பெரியமதவடி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

- குடும்பத்தினர்.

(24465)(35-21-15-19)




உலகப் புகழ் பெற்ற L.G
குளிர்சாதனப் பெட்டிகள்
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக
சேவையில் பெற்றிட



LG
Digitally yours

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766
(C-31122)

# விடுதலைப் புலிகளின் நகல் வரைவு எமக்கு ஆச்சரியம் தரவில்லை!

## ஈ.பி.டி.பியின் செய்தி அறிக்கையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.7

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள நகல் வரைவு எமக்கு ஆச்சரியம் தருவதாக இல்லை.

- இவ்வாறு ஈ.பி.டி.பி. வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாகம் தொடர்பான நகல் வரைவு என்ற வகையில் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள மாற்று யோசனைகள் எமக்கு ஆச்சரியம் தருவதாக இல்லை. தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகள் மற்றும் உரிமைகளுக்கு முன்னுரிமை கொடுப்பதற்குப் பதிலாக புலிகளின் மேலாண்மைக்கு அங்கீகாரம் பெறுவதாகவே இது இருக்கிறது. மக்களின் விருப்புக்குப் புறம்பாக தோற்றுவிக்கப்பட்ட புலிகளின் பொலீஸ், நீதித்துறை மற்றும் நிதித்துறை, நிர்வாக அமைப்புகள் போன்றவற்றுக்கு அரசினதும், சர்வதேச சமூகத்தினதும் அங்கீகாரத்தைப் பெறுவதையே இந்த யோசனைகள் அடிப்படை நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. அதாவது, இனப்பிரச்சினைக்கு இணக்கப்பாடான தீர்வொன்றைக் காணும் ஆவலை புலிகளின் இந்த நகல் வரைவு வெளிப்படுத்தவில்லை.

இந்த யோசனைகளின் முகவுரையில் கூறப்பட்டுள்ள விடயங்களில் பழைய சம்பவங்கள் நினைவுபடுத்தப் பட்டுள்ளன. எனினும், இவற்றில் சில விடயங்களில் உண்மைகள் இருட்டடிப்பு செய்யப்பட்டும், சில விடயங்கள் திரிவுபடுத்தப்பட்டும் இருக்கின்றன. மேலும், இந்த யோசனைகள் மூலம் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அரசியல் ரீதியிலும், அரசமைப்பு ரீதியிலும் பல சவால்கள் எதிர்நோக்கப்பட வேண்டியிருக்கும். இவ்வாறு சவால்களைச் சந்தித்து ஓர் இடைக்காலத் தீர்வைப் பெறுவதைவிட நிரந்தரத் தீர்வை நிலைநாட்டுவதே பொருத்தமானதாக இருக்கும்.

இதேவேளை - இடைக்கால நிர்வாகம் புலிகளின் தலைமையில் ஐந்து வருடங்கள் நீடிப்பது என்பது தமிழ்பேசும் மக்களுக்கு மட்டுமன்றி, வடக்கு - கிழக்கில் வாழும் மக்களினதும் ஒட்டுமொத்தமாக இலங்கை மக்களினதும் ஜனநாயக அரசியல் உரிமைகளுக்கு சாவுமணி அடிப்பதாகவே முடியும். ஏனெனில், இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தான பின்னரும்கூட மக்கள் மீதான துன்புறுத்தல்களையும், ஆள் கடத்தல்களையும், அரசியல் படுகொலைகளையும் புலிகள் முடிவுக்குக் கொண்டு வரவில்லை என்பது கவனத்திற்குரியதாகும். அத்துடன், இந்த யோசனைகளில் வடக்கு - கிழக்கில் வாழும் மக்கள் தமது விருப்பு, வெறுப்புகளை வெளிப்படுத்துவது குறித்தும், ஜனநாயக அரசியல் சூழல் பேணப்படுவது குறித்தும் எதுவும் குறிப்பிடப்படவில்லை. புலிகளின் அராஜகச் செயற்பாடுகள் நிறுத்தப்படும் என்னும் உத்தரவாதங்களும் காணப்படவில்லை. மேலும் இக்குறித்த காலப்பகுதிக்குள் புலிகள் மக்களை முற்றுமுழுதாக இராணுவ மயமாக்க முயற்சிப்பார்கள் என்பதும் எண்ணிப் பார்க்கப்படவேண்டியதாகும்.

எனவே, மக்களின் ஜனநாயக அரசியல் சுதந்திரங்களுக்கு மதிப்பு வழங்காமலும், மக்களின் விருப்பத்திற்கு மாறாகவும், புலிகள் தமது மேலாண்மையை ஆயுதபலத்தின் மூலம் தமிழ் மக்கள்மீது திணிப்பதற்கான ஒரு முயற்சியாகவே இந்த யோசனைகளை நாங்கள் கருதுகின்றோம் - என்றுள்ளது.

### மீள்குடியமர்ந்த மக்களுக்கு மலசலகூடங்கள்

யாழ்ப்பாணம்,நவ.7

சண்டிலிப்பாய்ப் பகுதியில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு 20 மலசல கூடங்களை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் அமைத்துக் கொடுத்துள்ளது.

யாழ். மாவட்டத்திலிருந்து போர்ச் சூழல் காரணமாக இடம்பெயர்ந்து வன்னிப்பிரதேசத்திற்கு சென்றவர்களில் மீண்டும் திரும்பிவந்து சண்டிலிப்பாயில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கே இந்த மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த மலசல கூடங்கள் அமைப்பதற்கான நிதி உதவியினை சிறுவர் பாதுகாப்பு நிதியம் வழங்கியுள்ளது.

ஒவ்வொரு மலசல கூடத்திற்கும் 15 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளதாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் யாழ். அலுவலகம் தெரிவித்துள்ளது. (ஒ-7)

# மக்களுக்கும் மண்ணுக்குமான செயற்றிட்டங்களே அவசியம்!

## செம்மணன் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,நவ.7

மக்களுக்கும் மண்ணுக்கும் பொருத்தமான செயற்றிட்டங்களை இங்கு இயங்குகின்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்படுத்தவேண்டும்.

- இவ்வாறு வலியுறுத்தினார் யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் செம்மணன்.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளுக்கும் யாழ். மாவட்ட அரசியல்துறையினருக்குமான கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை இணைய அலுவலகத்தில் இடம்பெற்றது. அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவா வி.தியாகராசா தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே செம்மணன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எங்கள் மக்களுடைய தேவைகளை அவர்களே இனங்கண்டு அவற்றைத் தீர்க்க முனையும்போது நல்ல பயனை அவர்கள் பெற்றுக்கொள்ள முடியும். இதனால் மக்களின் குறைபாடுகள், பிரச்சினைகள் என்பன குறைவடையும்.

செயற்றிட்டங்கள் யாவும் கீழிருந்து மேல் நோக்கிச் செயற்படுத்தப்படுவனவாக இருக்கவேண்டும். அதனையடுத்து மேல்மட்டத்திலிருந்து திட்டமிட்டு செயற்படுத்தப்படும் திட்டங்களால் மக்களுக்கு எவ்வித பயனும் ஏற்படாது - என்றார். (ஒ-5)

# தற்போதைய அரசியல் சூழ்நிலை சமாதான முயற்சிக்குக் குந்தகம்!

## ஏற்படுத்தக்கூடும் என்கிறார் சம்பந்தன் எம்.பி.

கொழும்பு,நவ.7

தற்போதைய அரசியல் சூழ்நிலை சமாதான முயற்சிக்கு குந்தகம் ஏற்படுத்தக் கூடும்.

- இவ்வாறு நேற்றுமுன்தினம் இரவு பி.பி.ஸி தமிழோசை நிகழ்ச்சிக்கு அளித்த செவ்வியில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதான முயற்சிக்குத் தடையேற்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாமென நாம் ஜனாதிபதியைக் கோரியுள்ளோம். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எவ்வாறு ஜனாதிபதி மக்களால் தெரிவு செய்யப்பட்டாரோ, அதேபோன்று கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐ.தே.கட்சி அரசு அமைத்துக் கொண்டது. அந்த அரசுக்கு இன்றுவரை நாடாளுமன்றில் பெரும்பான்மை உள்ளது. தமிழ் கூட்டமைப்பைச் சார்ந்த 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தப் பெரும்பான்மைக்கு மேலதிகமாக ஆதரவளிக்கக் கூடிய சூழ்நிலையில இருக்கின்றனர். சத்தியக் கடதாசி மூலம் நாம் அரசிற்கான ஆதரவை வழங்கியுள்ளோம்.

சந்திரிகா அரசு ஆட்சியில் இருந்த காலத்தில் ஒரு போர் நிறுத்தத்தை ஏற்படுத்த சந்தர்ப்பம் வழங்கப்பட்ட போதும் அதனை ஏற்படுத்தவில்லை. இக்காலத்தில் புலிகள் 4 மாத காலமாக தன்னிச்சையான யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்தி அதை நீடித்து வந்த போது சந்திரிகா அரசு அதனைப் பயன்படுத்தவில்லை. அதற்கு மாறாக 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி புலிகளால் தன்னிச்சையாக கடைப்பிடிக்கப்பட்ட யுத்த நிறுத்தம் முடிவடைந்த அன்று இரவே அவர்கள பாரிய யுத்த நடவடிக்கையை ஆரம்பித்தது உலகமறிந்த விடயம்.

ஜனாதிபதியுடன் பேச்சு நடத்துவது தொடர்பாக உத்தியோகபூர்வ அழைப்பெதுவும் எமக்கு இதுவரை கிடைக்கவில்லை.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு இவ்விடயம் சம்பந்தமாகப் பேசியுள்ளார். எமது நிலைப்பாட்டுக்கும் புலிகளின் நிலைப்பாட்டுக்கும் எவ்விதமான வேற்றுமையும் இல்லை - என்றார் அவர். (ஒ-8)

# சமாதான முயற்சிகள் தொடர சர்வதேச நாடுகள் விருப்பம்

கொழும்பு,நவ.7

இலங்கையில் தற்போது நடந்து வருகின்ற அரசியல் மாற்றங்களை அவதானித்து வரும் சர்வதேச நாடுகள் பல இலங்கையின் சமாதான முயற்சிகள் இடையூறின்றித் தொடர வேண்டும் என்று விரும்புகின்றன.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கும் அதன் ஜனநாயக அமைப்புக்களுக்கும் வலுவான ஆதரவு வழங்குவதாக அமெரிக்கத் தேசிய பாதுகாப்புக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து கருத்துத் தெரிவித்துள்ள பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் தற்போதைய அரசியல் நிலைமைகளால் சமாதான முயற்சிகள் பாதிக்கப்பட இடமளிக்கக் கூடாது என்றும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இந்திய அரசு ஆச்சரியம் அடைந்திருப்பதாகத் தெரிவித்த இந்திய வெளியுறவுத்துறை அதிகாரியொருவர் இலங்கையின் சமாதான முயற்சியும், நாட்டின் ஸ்திரத்தன்மையும் இதனால் பாதிக்கப்படாமல் இருக்கும் என இந்தியா நம்புவதாகத் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்களுக்கு அனுசரணையாளராக இருந்துவரும் நோர்வே அரசு இலங்கையின் தற்போதைய அரசியல் சூழல் பற்றிக் கருத்துக் கூற மறுத்துள்ளது. (ஒ-8)

### மண்டைதீவில் வீடு புகுந்து தாக்குதல்!

மண்டைதீவு,நவ.7


ஓட்டோவில் வந்த இருவர் குடிசை வீட்டுக்குள் புகுந்து அங்கிருந்தவரைத் தாக்கிய சம்பவம் சமீபத்தில் மண்டைதீவு இரண்டாம் வட்டாரத்தில் இடம் பெற்றது.

சம்பவ தினத்தன்று மாலை 4 மணியளவில் ஓட்டோவில் வந்து இறங்கிய இருவர், குடிசை வீட்டுக்குள் சாப்பிட்டுக்கொண்டிருந்த கந்தசாமி ஜனந்தகுமார் (வயது 30) என்பவரை தாக்கியதாகவும் - சந்தடி கேட்டு அங்கு கூடிய அயலவர்கள் தாக்குதலை தடுத்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

## தெய்வீக ஸ்தலங்களில்



சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்ற அருணகிரிநாதர் விழாவில் இந்துகலாசார அமைச்சின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம் சொற்பொழிவாற்றுவதையும் அருகில் காரை கு.சிவராஜசர்மா அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். *(படம்: வடமராட்சி செய்தியாளர்)*



நீர்வேலி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வரலாறும் ஊஞ்சல் பதிகமும் அடங்கிய நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்ற போது நூலாசிரியர் தெட்சணாமூர்த்தி கோபாலசிங்கத்துக்கு 'தெய்வக் கவிமாமணி' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம். *(படம்: நீர்வேலிச் செய்தியாளர்)*

# தெய்வீகப் பசுவைப் போற்றுவோம்!



பசு ஒரு சாதுவான பிராணி. அது சிவபெருமானுக்கு வேண்டிய அபிஷேகத் திரவியங்களை எமக்கு வழங்குகின்றது. அதுமாத்திரமன்றி உலக மாதாவாகிய பார்வதி அம்மையாரால் 'கோமாதா' என்று வணங்கப்படுகின்றதும் இந்தப் பசுதான். பசுவின் ஒவ்வோர் அங்கங்களிலும் தேவர்கள் உறைகின்றனர். இத்தனை பெருமையும் அருமையும் நிறைந்த பசுவை நாம் தெய்வமாக வழிபாடு செய்தல்வேண்டும்; போற்றிப் பாதுகாக்கவேண்டும்.

நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தப் பெருமான் தமது தேவாரத் திருப்பதிகத்திலே "வாழ்க அந்தணர், வானவர் ஆனினம்" என்று அழகாகக் குறிப்பிடுகின்றார். பசுக்கூட்டங்கள் நன்கு கவனிக்கப்பட வேண்டியவை. முன்னாளில் ஒரு நாட்டின்மீது யுத்தம் மேற்கொள்வதாயின் பகைவர்

### ஞானக்கதிர்

களால் முதலில் பசுநிரை கவரப்படும்.

பெருமைமிக்க பசுக்கள் நமது அருஞ்சொத்தாகும். அந்த அரிய பெரிய தேடற்கரிய செல்வச் சொத்துக்களான பசுக்கள் நம்மால் வழிபடவேண்டியவை.

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

புலால் உண்ணுதலே பாவம். அதிலும் பசுவைக் கொன்று தின்னுதல் மகாபாவம். பசுவை வணங்க வேண்டுமே தவிர வதைக்கக்கூடாது.

பசுவின் சிறப்பியல்புகள் எண்ணிலடங்காதவை. ஆலய கும்பாபிஷேகத்தின்போது பசுவின் முக்கியத்துவம் நன்கு புலப்படுகின்றது. பசுவுக்குத் தீபாராதனை செய்து வழிபாடுகள் முடித்தே மூலமூர்த்திக்குப் பூசை நடைபெறும். பசுவை வழிபட்ட பின்புதான் கடவுளை வழிபடுகின்றோம். இதிலிருந்து நாம் அறிவது என்ன? பசு ஒரு தெய்வீகம் நிறைந்த பிராணி. அதனை நாம் நன்கு பேணவேண்டும்; பாதுகாக்க வேண்டும் என்பதுதான்.

#### பசுவின் உயர்வுகள்

ஒவ்வொரு நாளும் பசு மாட்டில் கண் விழித்தோமேயானால் வாழ்வு வளம்பெறும். யாவும் நன்மையாய் நடக்கும். எல்லாம் சிறப்பாக முடியும். எனவே, சைவமக்களாகிய நாம் பசு மாட்டைக் கொன்று தின்பதை அறவே நிறுத்தவேண்டும். நாங்களும் எம்மாலான மட்டும் முயன்று பசுவதையை நிறுத்துவதற்கு ஆவன செய்து பசுவைப் பாதுகாக்கும் முயற்சிக்கு முழு ஆதரவை வழங்கி நிற்போமாக. ☆

# காலாவதியான பொருள்கள் விற்ற மூவருக்கு தலா 3000. ரூபா அபராதம்

சண்டிலிப்பாய்,நவ.7

திகதி காலாவதியான உணவுப் பொருள்களை தங்கள் கடைகளில் விற்பனைக்கு வைத்திருந்த குற்றச் சாட்டின் பேரில் சுகாதாரப் பகுதியின ரால் பண்டத்தரிப்பை சேர்ந்த மூன்று வர்த்தகர்களுக்கு எதிராகத் தொடரப் பட்ட வழக்குகளில் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் மூவருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

ஒரு தேநீர்க்கடை உரிமையாள ருக்கும் இரண்டு பலசரக்குக்கடை உரி மையாளர்களுக்கும் எதிராக இந்த வழக்கு கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

உணவுச் சட்டத்தின் கீழ் மானிப் பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணி மனை பிரிவு பொதுச் சுகாதார பரி சோதகரினால் இந்த வழக்கு தாக் கல் செய்யப்பட்டிருந்தது. (ம-135)

---

யாழ்ப்பாண மாநகரசபை

## பொதுமக்களுக்கான ஓர் அறிவித்தல்

மாநகரசபை எல்லைக்குள்ளிருக்கும் பல வீதிகளில் பல்வேறு வகையான கட்டடப்பொருள்கள், கழிவு இரும்புகள், வாகன உதிரிப்பாகங்கள் போன்றவை பொறுப்பற்ற விதத்தில் பொதுமக்களினால் போடப்படுவதினால் வாகனப் போக்குவரத்திற்கு இடையூறாகவும், வீதி விபத்துக்களை ஏற்படுத்தும் காரணிகளாகவும் அமைந்துள்ளதினால் அவ்வாறான பொருள்களை எக்காரணம் கொண்டும் வீதிகளில் போடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு யாழ். நகரமக்கள் அனைவரையும் தயவாகக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தவறுவோர் இனங்காணப்பட்டு தண்டிக்கப்படுவது தவிர்க்கமுடியாததாகிவிடும் என்பதையும் தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும்.

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(C-31164) (34)

---

## பாதுகாவலர்கள் தேவை

யாழ்ப்பாண பாதுகாப்புச் சேவைக்கு ஆள்கள் தேவை. நற்சான்றுப் பத்திரங் களுடன் (8.11.2003, 9.11.2003) சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 10-11 மணிக்கு இடையில் நேரில் வரவும்.

இயக்குநர், பாதுகாப்புச் சேவை,
(லக்ஷ்மி தியேட்டர்முன்ஒழுங்கை)
கே.கே.எஸ் வீதி,
இணுவில்.
(34-25) (C/31169)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக மாணவரும் பயிற்றுநருமாகிய
K.J.சுதர்ஷன் (முதலாம் கறுப்புப்பட்டி)
அவர்களின் அன்புத் தந்தையார்

### சின்னையா வின்சன்ட் கோமகன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு, அன்னாருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

பிரதம ஆசிரியரும், சக பயிற்றுநர்களும்,
மாணவர்களும்
யாழ்ப்பாணம்.
SHOTOKAN KARATE ACADEMY (S.K.A.)
(24471)(35-15-19-21)

---

## நெஞ்சை விட்டகலா நினைவலைகள்

2ஆம் வருடம



மலர்வு 1927 - 06 - 02 உதிர்வு 2001 - 11 - 07

அமரர்
**பொன்னையா பூவிலிங்கம்**
(இளைப்பாறிய ஆசிரியர், கஞ/யாழ். பரியோவான் கல்லூரி)

18 திங்கள்



மலர்வு 1935 - 07 - 10 உதிர்வு 2002 - 05 - 04

**திருமதி மரியமுத்து பூவிலிங்கம்**
(இளைப்பாறிய உப அதிபர், யாழ். மெதடிஸ் மிஷன். யாழ். வேம்படி மகளிர் கல்லூரி.)

ஈராண்டு ஆனதே ஈரவிழிகள் காயவில்லை - அப்பா
முகம் கண்டு மூவாறு திங்களானதே - அம்மா
நினைவுகள் மட்டும் நெஞ்சில் இனிக்க
நிஜங்கள் நெஞ்சை அழுத்த
நிலை தடுமாறுகின்றோம் நாங்கள்
ஆன்மா ஆண்டவனில் அமைதி காண
அருள் வேண்டுகின்றோம். (25-16)

85, தேவாலய வீதி,
யாழ்ப்பாணம்.(24488)

உங்கள் நினைவில் :
பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

---


காத்திருப்பதற்கும்
தாமதத்திற்கும் பிரச்சினைகளுக்கும் முற்றுப் புள்ளி வைப்போம்.

அதி சக்தி வாய்ந்த
SHARP
SF 1118 பிரதியெடுக்கும் கருவி



SF-1020
நிமிடத்திற்கு 20 பிரதிகள்



SF-2030
நிமிடத்திற்கு 30 பிரதிகள்

ஒரு பிரதிக்கு 37 சதம் மட்டுமே




அசல் SHARP டோனர் உயர் தரத்திலான அதிக பிரதிகளைப் பெறுவதை உறுதி செய்கிறது.

SF 1118
- நிமிடத்திற்கு 18 பிரதிகள்
- நம்பகமான தாள் அளிக்கும் ஒழுங்கு
- தெளிவான பிரதிகள்
- உண்மையான மூலப் பிரதிகளின் மீள் உற்பத்தி
- மேலதிக சக்தியை சேமிக்கும் மாதிரி

காட்சியறைகள் :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அம்பலாங்கொடை | - தொ.பே: 091-2258371 | யாழ்ப்பாணம் | - தொ.பே: 021-2225150 | மாத்தறை | - தொ.பே: 041-2229266 |
| அம்பாறை | - தொ.பே: 063-2224633 | கடவத்த | - தொ.பே: 2801071 | மாத்தளை | - தொ.பே: 066-2234040 |
| அநுராதபுரம் | - தொ.பே: 025-2223388 | கதுருவெல | - தொ.பே: 027-2225736 | கல்கிஸ்ஸை | - தொ.பே: 2734447 |
| அக்குரஸ்ஸை | - தொ.பே: 041-2263338 | களுத்துறை | - தொ.பே: 034-2225022 | நாவலப்பிட்டி | - தொ.பே: 054-2224068 |
| பதுளை | - தொ.பே: 055-2229964 | கண்டி | - தொ.பே: 081-22201771 | நீர்கொழும்பு | - தொ.பே: 031-2222298 |
| மட்டக்களப்பு | - தொ.பே: 065-2226385 | கட்டுகஸ்தோட்டை | - தொ.பே: 081-22232020 | நிட்டம்புவ | - தொ.பே: 033-2284832 |
| சிலாபம் | - தொ.பே: 032-2221735 | கேகாலை | - தொ.பே: 035-2223924 | நுகேகொடை | - தொ.பே: 2808289 |
| டாலி வீதி | - தொ.பே: 074-718860 | குருநாகல் | - தொ.பே: 037-2221545 | நுவரெலியா | - தொ.பே: 052-2235530 |
| எம்பிலிப்பிட்டிய | - தொ.பே: 047-2261280 | குருவிட்ட | - தொ.பே: 045-2225149 | இரத்தினபுரி | - தொ.பே: 045-2225149 |
| காலி | - தொ.பே: 091-2247208 | மஹரகம | - தொ.பே: 074-812742 | திஸ்ஸமஹாராம | - தொ.பே: 047-2239236 |
| கம்பஹா | - தொ.பே: 033-2230500 | மஹரகம | - தொ.பே: 2843852 | வவுனியா | - தொ.பே: 024-2220081 |

SHARP
be sharp

விலை ரூ. 148,000/= + வற் வரியுடன்

ஏக முகவர்கள்
BG பிரவுன் அன்ட் கம்பனி லிமிட்டட்
481, டீ. பீ. ஜயா மாவத்தை, கொழும்பு-10.
தொ. பே: 2697111, 2698411 பக்ஸ்: 2698489
e-mail : oasales@brownsgroup.com
உடனடி சேவை அழைப்பு-2696870

உடனடி அழைப்பு - 075-338621

Tradlanka Advertising

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# பொ.ஐ.முன்னணி ஜனாதிபதி வேட்பாளராக லக்ஷ்மன் கதிர்காமருக்கு அதிக வாய்ப்பு

**அண்மையில் பொ.ஐ.முன்னணியால் ஒழுங்குசெய்யப்பட்ட 'மக்கள் கோஷம்' நிகழ்வில் லக்ஷ்மன் கதிர்காமர் சிங்கள மொழியில் உரையாற்றியுள்ளார். தற்போதைய நிலையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா போட்டியிடமுடியாத நிலையில் சந்திரிகாவின் நம்பிக்கைக்குரிய ஜனாதிபதி வேட்பாளராக கதிர்காமரே விளங்குகிறார். இதுகுறித்து 'லங்காதீப' நாளிதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

"அம்மையாரிடம் நாட்டை ஒப்படையுங்கள்! அதற்காக நீங்கள் கொப்பேக்கடுவவுக்கு வாக்களியுங்கள்."

இது, 1982 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரசார வேளையில் ஸ்ரீல.சு.கட்சியினரால் எழுப்பப்பட்ட கோஷம். 2005 ஆம் ஆண்டில் இடம்பெறப்போகும் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போதும் அவர்கள் இவ்வித கோஷங்களையே எழுப்பவுள்ளனர். இதற்குக் காரணம், 1982 இல் சிறிமாவோ பண்டாரநாயக்க தேர்தலில் போட்டியிட இயலாமற் போனமை போன்றே, 2005 இல் இடம்பெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா போட்டியிட முடியாத நிலை. இதனால், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான அவர்களது கோஷம் இவ்வாறு அமையக்கூடும். "சந்திரிகாவிடம நாட்டை ஒப்படையுங்கள்; அதற்காக......... இற்கு உங்கள் வாக்குகளை அளியுங்கள்".

வெற்றிடமாயுள்ள இடத்தில் எவரது பெயர் இடம்பெறப்போகிறது என்றறியும் ஆவல் தற்போது பலபேர் மத்தியில் காணப்படுகிறது.

"ஏன் அநுரா இல்லையா? மஹிந்த ராஜபக்ஷ இல்லையா? அப்படியல்லாவிடின் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் உள்ளனரே?"

இவ்வித கருத்து பலபேர் மனதில் உருவாகியுள்ளபோதிலும் ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்சியின் வேட்பாளரைத் தெரிவுசெய்யும் அதிகாரம் சந்திரிகாவின் கைகளிலேயேயுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராகச் சந்திரிகா எவரைத் தெரிவுசெய்யவிருக்கிறார்?

அண்மையில் ஸ்ரீல.சு.கட்சியினர் ஒன்றுதிரண்டு கொழும்பில் நடத்திய மக்கள் கோஷம் நிகழ்ச்சியின் மூலம சந்திரிகா அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக எவரைத் தெரிவுசெய்வார் என்பதை சூசகமாகத் தெளிவுபடுத்தியுள்ளனர்.

சந்திரிகாவின் தெரிவுக்குரியவர் வேறு யாருமல்லர். பொ.ஐ.முன்னணியின் அரசியல் வெளிவிவகார அமைச்சராகக் கடமையாற்றிய லக்ஷ்மன் கதிர்காமரே அவராவார்.

எவ்வாறு அவ்விதம் நிச்சயமாகக் கூறமுடிகிறது?

இது வெறும் பேச்சுக்காக, ஊகத்தின் அடிப்படையில் கூறப்படும் செய்தியல்ல. அரசியல் வரலாற்றை நன்றாக அலசி ஆராய்ந்ததன் பேரில் மேற்கொள்ளப்பட்ட முடிவு இதுவாகும். மக்கள் கோஷப் பேரணி ஸ்ரீல.சு. கட்சியால் முன்னெடுக்கப்பட்ட வெற்றிகரமான ஒரு நிகழ்ச்சியாகும். இது குறித்து இரண்டுவித கருத்துகளுக்கு இடமில்லை. இந்நிகழ்ச்சியில் பங்குகொண்டோரில் பெரும்பாலோர் சந்திரிகா தற்போதைய அரசை எவ்விதம் பதவியிலிருந்து அகற்றி, புதிதாகப் பொ.ஐ.முன்னணி ஆட்சியை உருவாக்கப்போகிறார் என்ற விவரம் அறியும் ஆவலினால் கலந்துகொண்டனர் எனத் தெரிகிறது. ஆனால், அவ்விதம் ஐ.தே.முன்னணி அரசு அகற்றப்படவுமில்லை. தப்பித்தவறி சந்திரிகா அப்பேரணியில் இணைந்து கொள்ளவும் இல்லை. 'மக்கள் கோஷ' பேரணி நிகழ்ச்சி ஒழுங்குசெய்யப்பட்டதன் நோக்கம் நிறைவேறாதபோதிலும், பலரும் எதிர்பார்க்காத சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. லக்ஷ்மன் கதிர்காமர் சிங்கள மொழியில் உரையாற்றிய சம்பவமே பலர் எதிர்பாராத வகையில் அப்பேரணி நிகழ்ச்சியில் இடம்பெற்ற சம்பவமாகும்.

அவ்வாறாயின், அது அத்துணை முக்கியம் வாய்ந்ததொரு சம்பவமாக அமைகின்றதா?

இம்மக்கள் கோஷப் பேரணி நிகழ்ச்சிமூலம் பெரும் திருப்பம் ஒன்றை எதிர்பார்த்திருந்த தரப்பினருக்கு கதிர்காமர் சிங்கள மொழியில் நிகழ்த்திய உரை முக்கியம் வாய்ந்த விடயம போல அமைந்தது.

"மக்கள் கோஷம் பேரணி நிகழ்ச்சி திருப்தியளிப்பதாக அமைந்ததா?"

"அரசுக்கு எதிராக பெரிய அளவிலான எதிர்ப்புணர்வு வெளிப்படுத்தப்பட்டது."

"கதிர்காமர் சிங்கள மொழியில் உரையாற்றினாராமே?"

மிக விசேடமாக குறிப்பிடக்கூடிய வகையில் அது அமைந்தது. தலைநகரில் மட்டுமல்ல, கிராமப் புறங்களிலும் அவரது அவ் உரை குறித்துப் பரவலாகப் பேச்சு அடிபட்டது'.

'கதிர்காமர் சிங்கள மொழியில் உரையாற்றியது பெரியதொரு விடயமல்லவா? பலர் இவ்விதம் ஆச்சரியப்பட்டனர்.

புதுத்தலையணைக்கு கதிர்காமர் மேலுறை மாட்டுகிறார் என்பதைப் புரிந்துகொண்டவர்களே இவ்விதம் பேசிக்கொண்டனர். அந்தப் புதுத் தலையணை வேறு எதுவுமல்ல; அதுதான ஜனாதிபதி ஆசனமாகும்.

'சந்திரிகா இதனை விரும்புவாரா?'

சந்திரிகா இதனை விரும்பாதிருக்க எதுவித காரணமும் இல்லை. உண்மையில் சொல்லப்போனால் இது தனது தலைமைத்துவத்தின் பாதுகாப்புக்காக சந்திரிகாவே மேற்கொள்ளும தெரிவு ஆகும்.

உண்மையில் கதிர்காமர் ஓர் அரசியல் தலைவராக ஆவதற்கோ அல்லது அரசியல் தலைமைத்துவம் வகிக்கவோ தகுதி கொண்டவர் அல்லர். ஆகவே, கதிர்காமர் அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படுவாராகில் சந்திரிகாவின் கட்சித் தலைமைத்துவத்திற்கு எதுவித இடையூறும் ஏற்படப்போவதில்லை. அவ்விதம் ஜனாதிபதிப் பதவி கிட்டாவிட்டாலும் கதிர்காமரால் கட்சியினுள் பிரபல்யமாகி அதன மூலம் சந்திரிகாவின் தலைமைத்துவத்திற்கு எதிராக தலைதூக்கமுடியாது. இவையாவற்றிற்கும் மேலாக கதிர்காமர் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர். சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர் என்பதால் ஜனாதிபதி பதவியை வகிக்கவோ அல்லது கட்சியின் தலைமைப் பதவியை வகிக்கவோ இயலாத நிலை அவருக்குண்டு. பொ.ஐ.முன்னணியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக நியமிக்கப்பட்டு, ஒருவேளை அவர் தேர்தலில் வெற்றிபெற்றாலும் கூட சந்திரிகாவின் விருப்பின்படி ஜனாதிபதிப் பதவியை ஒழித்துக்கட்டும் நடவடிக்கையை மேற்கொண்டு, பதவியைக் கைவிட்டு, வெளியேறுவதைத்

## வியெஸ்ரி

தவிர, தானே ஜனாதிபதி என்ற வகையில் அப்பதவியில் தொடர்ந்து நிலைநிற்க அவரால் இயலாது.

இக்காரணத்தாலேயே தமது தலைமைத்துவப் பாதுகாப்புக்கான தெரிவாக கதிர்காமரை பொ.ஐ.முன்னணியின் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளராக சந்திரிகா தேர்ந்தெடுத்துள்ளார் எனக் கூறவேண்டியுள்ளது. அநுரா மீது மட்டுமன்றி மஹிந்த ராஜபக்ஷ மீதும் சந்திரிகாவால் நம்பிக்கை வைக்க முடியவில்லை. அதேபோன்று கட்சியின் மற்றெந்தச் சிரேஷ்ட தலைவர் மீதும் நம்பிக்கை வைக்க அவருக்கு முடியவில்லை.

சிறிமாவோ பண்டாரநாயக்கவை அரசியலுக்கு அறிமுகப்படுத்தியவரும், அவரது நெருங்கிய உறவினருமான கொப்பேக்கடுவவையே சிறிமாவால் நம்பமுடியவில்லை. அவ்விதம் இருக்கையில் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் தொடர்பாக ஸ்ரீல.சு.கட்சியிலுள்ள எவரையும் சந்திரிகா நம்புவாரென எண்ண இயலாதுள்ளது.

1982 ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீல.சு.கட்சி வேட்பாளராக நியமனம் பெற்ற கொப்பேக்கடுவ "நான் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் பறிக்கப்பட்ட சிறிமாவோவின் பிரஜாவுரிமையை மீண்டும் அவருக்கு வழங்கி, அதிகாரத்தையும் அவரிடம் ஒப்படைப்பேன" எனக் கூறிக்கொண்டே முதலில் தனது தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்தார். பின்னர், கட்சியைச் சேர்ந்த அனைவரும் தன்பின்னால் அணிதிரண்டு ஆதரவளிக்க முன்வந்ததைக் கண்டு, எதிர்காலத்தில் தானே ஜனாதிபதியாகச் செயற்படப்போவதாக கருத்து வெளியிட ஆரம்பித்தார். அத்தோடு, இடதுசாரிகளின் அரசொன்றை உருவாக்குவது குறித்தும் அபிப்பிராயம் வெளியிட்டார். ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிய வேளையில் 'சிறிமாவோ என்றொருவர் உள்ளாரா? எனக் கேள்வியெழுப்பும் பாணியில் சிறிமாவோவை அலட்சியப்படுத்தித் தனது தேர்தல் பிரசாரத்தை முன்னெடுத்துச் சென்றார்.

சந்திரிகா இந்த வரலாறு யாவற்றையும் அறியாதவரல்லர். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவர் சட்டப்படி போட்டியிட முடியாதநிலை ஏற்படுமானால், அதற்கு மாற்றாக ஸ்ரீல.சு.கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரைத் தெரிவுசெய்யும் வேளையில் மேற்சொன்ன வரலாற்று நிகழ்வுகள் குறித்துப் பரிசீலிக்கவேண்டிய தேவை சந்திரிகாவுக்கு ஏற்படக்கூடும். இவ்விதம் விரிவாக ஆராய்ந்து பார்க்க முயன்ற சந்திரிகாவின் தெரிவுக்கு உள்ளாகியுள்ள பிரமுகரே லக்ஷ்மன் கதிர்காமராவார்.

'சந்திரிகா தேர்ந்தெடுத்த குதிரையால் பந்தயத்தில் ஓடி வெற்றிபெற முடியுமா?'



ஜனாதிபதிப் பதவிக்கான பந்தயத்தில் கலந்துகொள்ளத் தகுதியுடைய சகல குதிரைகளிலும் கதிர்காமர் என்ற குதிரைமீது நம்பிக்கை கொள்ள முனைவது வெற்றி, தோல்வி குறித்த கண்ணோட்டத்தில் அல்ல. சந்திரிகாவின் தலைமைத்துவத்துக்கான பாதுகாப்புக்கு, பங்கம் ஏற்படக்கூடாதென்ற நோக்கத்தினாலேயே ஆகும்.

கதிர்காமர் ஒரு நொண்டிக் குதிரையல்ல; அவர் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர். சிறுபான்மை இனத்தவரின் வாக்குகளைப் பெறுவது என்பது ஸ்ரீல.சு.கட்சி எதிர்நோக்கும் ஒரு பாரிய பிரச்சினையாகும்.

"கதிர்காமரை ஸ்ரீல.சு.கட்சி சார்பில் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக நியமித்தால் தமிழர்கள் உட்படச் சிறுபான்மை இனத்தவர்களின் வாக்குகளை பெறக்கூடிய வாய்ப்பு ஸ்ரீல.சு.கட்சிக்கு கிட்டக்கூடும்.

அதுமட்டுமன்றி, விடுதலைப் புலிகள் அமைப்பையும் இவ்வித நடவடிக்கை மூலம் கவரக்கூடிய சந்தர்ப்பம் ஸ்ரீல.சு.கட்சிக்கு வாய்க்கக்கூடும். அண்மைய காலத்தில் கதிர்காமருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் இடையே கடும் கருத்து வேறுபாடுகள் நிலவிவருகின்றபோதிலும், 1983 ஆம் ஆண்டில் இடம்பெற்ற கறுப்பு ஜூலை கலவரங்களுக்கு முன்பிருந்தே நாட்டின் இனப்பிரச்சினை போன்றே, தமிழ் மக்களது கஷ்டங்களும் இருந்துவந்துள்ளன என்று லக்ஷ்மன் கதிர்காமர் உலகத்து மக்களுக்கு விளக்கிக் கூறிவந்துள்ளார். இவ்விதம் தமிழ்மக்களின் நிலைகுறித்து கதிர்காமர் போன்ற பல புத்திஜீவிகள் உலகத்துக்கு எடுத்துக்காட்டியதன் பயனாக விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு சர்வதேசத் தொடர்புகளை விரிவான வகையில் உருவாக்கிக் கொள்ளக்கூடியதாய் அமைந்தது எனச் சந்திரிகா நினைக்கிறார்.

இதற்கான முக்கிய உதாரணமொன்றினை குறிப்பிட்டுக்காட்ட முடியும். 1959 ஆம் ஆண்டில் முன்னாள் பிரதமர் எஸ்.டப்ளியூ.ஆர்.டீ.பண்டாரநாயக்க கொலையுண்ட சமயம் கதிர்காமர் இங்கிலாந்து ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் மாணவராகவிருந்தார். அப்பல்கலைக்கழக மாணவர் சங்கம் ஒழுங்குசெய்த பிரதமர் பண்டாரநாயக்காவின் நினைவு நிகழ்ச்சியில் சொற்பொழிவாற்றுமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளை அச்சமயம் ஏற்றுக்கொள்ள கதிர்காமர் மறுத்துவிட்டார். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் பழைய மாணவரும், அங்கு கல்வி கற்ற வேளையில் மாணவர் சங்கத்தில் கௌரவ பதவியொன்றை வகித்தவருமான பிரதமர் பண்டாரநாயகாவின் மரணம் தொடர்பான நினைவு நிகழ்ச்சியில் சொற்பொழிவாற்றுமாறு, அவ்வேளையில் மாணவர் சங்கத்தின கௌரவ பதவியொன்றை வகித்து வந்த இலங்கையர் என்ற ரீதியிலேயே கதிர்காமரிடம் அவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஆனால், சிங்கள மொழியை மட்டுமே அரசகரும மொழியாகப் பிரகடனப்படுத்தியதன மூலம் தமிழ் இனத்துக்கு அநியாயம் இழைத்தது மட்டுமன்றி, தமிழ் மக்களுக்கெதிரான இனவாதக் கலவரங்களுக்கு பிரதமர் பண்டாரநாயக்கா உற்சாகமளித்தார் எனக் குற்றஞ்சாட்டியே அவ்வேண்டுகோளைக் கதிர்காமர் ஏற்கமறுத்துவிட்டார்.

கடந்த பொ.ஐ.முன்னணி அரசு பதவியேற்றசமயம் இடம்பெற்ற பண்டாரநாயக்கா நினைவுதின நிகழ்ச்சியில் கலந்துகொண்டபோது இந்த ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகச் சம்பவம் பற்றிக் கதிர்காமரே விவரங்களை வெளியிட்டார். அது மட்டுமன்றி, தான் பொ.ஐ.முன்னணியின் நியமன உறுப்பினராக நியமனம் பெற்றதன் மூலம், வரலாற்றில் இடம்பெற்ற தனது முன்னைய தவறினைத் திருத்திக் கொள்ளும் பொருட்டு சந்திரிகாவின் அரசுக்குத் தனது முழு ஒத்துழைப்பையும் வழங்கவிருக்கின்றார் எனவும் அப்போது கதிர்காமர் தெரிவித்திருந்தார்.

அந்தவகையில், கதிர்காமரின் பிரவேசம் ஸ்ரீல.சு.கட்சிக்குள் விமர்சனங்களுடனான மாற்றத்தை ஏற்படுத்தக் காரணமாயிற்று. இதன்காரணமாக ஸ்ரீல.சு.கட்சியில் கதிர்காமர் பிரபலமானார். பொ.ஐ.மு. அரசின் அமைச்சரவை சத்தியப்பிரமாணம் மேற்கொண்ட வேளையில், இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவ்வேளையில் எதிர்க்கட்சித் தலைவராகக் கடமையாற்றிய காமினி திஸாநாயக, வெளிவிவகார அமைச்சராகக் கதிர்காமரை நியமித்தமை புத்திசாலித்தனமானசெயலெனக் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்நாட்டுத் தமிழ்மக்களின் பிரச்சினை தொடர்பாக ஸ்ரீலங்கா குறித்து உலகம் முழுவதிலும் ஏற்பட்டிருந்த களங்கத்தைப் போக்கிக்கொள்ளும் நோக்கில் தமிழர் ஒருவரை வெளிவிவகார அமைச்சராக நியமிப்பதன் பெறுமதியை காமினி திஸாநாயக்க உணர்ந்திருந்தமையால் அவர் அவ்விதம் கருத்துத் தெரிவித்திருந்தார்.

ஸ்ரீல.சு.கட்சி சார்பாக தமிழரொருவர் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராகத் தெரிவுசெய்யப்பட்டால் சிங்கள இனவாத சக்திகளின் செயற்பாடுகள் எவ்விதம் அமையக்கூடும்?

கதிர்காமருக்குச் சிங்கள இனவாத சக்திகள் மத்தியிலும் கணிசமான ஆதரவு உண்டு. கதிர்காமர் விடுதலைப் புலிகள் அமைப்பு மீது காட்டிவரும் தீவிர எதிர்ப்பு உணர்வே இதற்கான காரணமாகும். இக்காரணத்தால் இந்த இனவாத சக்திகள் மத்தியிலும் கதிர்காமர் விருப்புக்குரிய தலைவராகத் திகழ்கிறார்.

மற்றொரு வகையில், ஸ்ரீல.சு.கட்சிக்குள் கதிர்காமர் பக்கச்சார்பாக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறார். அவர் கட்சித் தலைமைத்துவத்துக்கு மட்டுமன்றி, கட்சியின் சிரேஷ்ட தலைவர்களுக்கும் எதிராக இயங்கக்கூடியவரெனக் கருதமுடியாது. ஆனாலும் கதிர்காமர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராகச் ஸ்ரீல.சு.கட்சியின் சார்பில் நியமனமாவதை கட்சியின் ஒட்டுமொத்த உறுப்பினர்களும் ஆதரிப்பரெனக் கருதமுடியாது.

எவ்விதமாவது பொ.ஐ.முன்னணியை அதிகாரத்தில் அமர்த்த வேண்டுமெனவிரும்பும் மங்கள சமரவீர இவை பற்றியெல்லாம் தெளிவாகப் புரிந்து வைத்துள்ளார். இவர் கட்சியின் சுமையை தன் தோள்களில் தாங்கிக் கொண்டியங்கும் பிரமுகராவார். எவ்வளவுதான் கட்சிக்கு விசுவாசமாக உழைத்தபோதிலும், தம்மால் கட்சியில் முன்னிலையடைய இயலாதென்பதை அவர் நன்கறிவார். தான் எவ்வளவு தூரம் முயற்சித்த போதிலும், தான் கட்சியில் முன்னணி வகிக்க அனுமதிக்கப்படப்போவதில்ல என்பதையும் அவர் தெரிந்துவைத்துள்ளார். கட்சியில் முன்னணியில் நின்று, எதிர்ப்படும் எதிர்ப்புக்களைக் சமாளிக்கக் கூடியதிறன் கதிர்காமருக்கு உண்டென்பதையும் மங்கள சமரவீர நன்கறிவார். இதன் காரணமாகவே, தற்போதைய ஐ.தே.முன்னணி அரசைக் கவிழ்த்துவிட்டு பொ.ஐ.முன்னணி அமைக்கத்திட்டமிட்டுள்ள புதிய அரசின் பிரதமராக கதிர்காமர் நியமிக்கப்படவேண்டுமென அவர் கருத்துத் தெரிவித்து வருகின்றார்.

உண்மையில் கதிர்காமரும் மங்கள சமரவீரவும் அரசியல் ரீதியில் முடவனும் குருடனும் போன்றவர்கள். குருடனின் தோளில் பயணம் செய்யும் முடவன், குருடனுக்கு வழிகாட்டியாய் அமைவதோடு, தனது பயணத்தையும் இலகுவாக மேற்கொள்ள முடிகிறது. பயணத்தின் இடைநடுவில் இவ்விருவருக்குமிடையே பிரச்சினை ஏதாவது உருவானால் ஒருவரின் உதவியின்றி மற்றவர் பயணத்தைத் தொடர முடியாது போய்விடும்.

இப்பயணத்தின் முக்கிய குறிக்கோள் கட்சியினுள் சந்திரிகாவின் தலைமைத்துவத்துக்கு ஆபத்து ஏதும் ஏற்படாது பாதுகாத்துக் கொள்வதாகும். அதேவேளை, சந்திரிகா இச்சிக்கல் தொடர்பாகச் சிரமத்தில் மாட்டிக் கொள்ளாது கரையேறிவிடக் கூடும். இவ்வாறானதொரு சூழ்நிலையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீல.சு.கட்சி வெற்றிபெற்றாலும் சரி, தோல்வியடைந்தாலும் சரி, அதனால் சந்திரிகாவின் தலைமைத்துவத்துக்கு எதுவித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை.

இதன் காரணமாகவே சந்திரிகாவின் கரங்களைப் பலப்படுத்தும் நோக்கத்தில் ஒழுங்குசெய்யப்பட்ட மக்கள் கோஷம் பேரணித் திட்டத்தில் கதிர்காமர் முக்கிய பாத்திரம் ஏற்று நடிக்க வேண்டி ஏற்பட்டது. அப்பேரணிக் கூட்டத்தில் சிங்கள மொழியில் உரையாற்றியதன் மூலம் அரசியல் தலைவரொருவராக ஆகக்கூடிய தகுதி தம்மிடமும் உள்ளதெனக் கதிர்காமர் தெளிவுபடுத்தியுள்ளார். கடந்த எட்டு ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் அரசியலரங்கில் சிங்கள மொழியில் ஒரு வார்த்தையேனும் பேசியிராத கதிர்காமர், சந்திரிகாவின் கரங்களைப் பலப்படுத்தும் நோக்கத்தில் ஒழுங்குசெய்யப்பட்ட மக்கள் கோஷம் பேரணி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிங்கள மொழியில் உரையாற்றியமை, சந்திரிகாவின் அதிகாரத்தை நலிவடையச் செய்யவுள்ள எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகாவின் கட்சித் தலைமைத்துவத்தை உறுதிசெய்யக்கூடிய வேட்பாளர் ஒருவரைத் தெரிவுசெய்யும் முயற்சியை சந்திரிகா ஒத்திகை பார்க்க ஆரம்பித்துள்ளதாகக் கருதமுடிகிறது.

2005ஆம் ஆண்டில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், ஸ்ரீல.சு.கட்சி சார்பான அபேட்சகர் எவர் என்பது குறித்த பந்தயத்தில் ஈடுபடும் எவராவது கதிர்காமரின் பெயருக்குப் பந்தயம் கட்டினால், அவரது பந்தயப்பணம் பல மடங்கு இலாபத்தை அவருக்குப் பெற்றுத்தரும் என்பது நிச்சயமாகும். ★

# உலகக் கிண்ண உதைபந்தாட்டத்தை தென்னாபிரிக்காவில் நடத்த வேண்டும்!

## நெல்சன் மண்டேலா வலியுறுத்துகிறார்

தென்னாபிரிக்கா,நவ.7

2010ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்தும் உரிமை தென்னாபிரிக்காவுக்கு வழங்கப்பட வேண்டுமென அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா கோரிக்கை விடுத்துள்ளார்.

நிறவெறி ஆட்சியிலிருந்து அமைதியான முறையில் ஜனநாயகத்திற்கு மாறியமைக்கு வெகுமதியாக உலகக் கிண்ண வாய்ப்பு தென்னாபிரிக்காவுக்கு வழங்கப்பட வேண்டுமெனவும் மண்டேலா கூறுகிறார்.

2010ஆம் அண்டு உலகக் கிண்ணப் போட்டிகளை நடத்தும் உரிமை ஆபிரிக்க நாடொன்றுக்கு வழங்கப்படுமென சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனம் (ஃபீஃபா) உறுதியளித்துள்ளது.

இப்போட்டிகளை நடத்த விண்ணப்பித்த தென்னாபிரிக்காவுக்கு ஃபீஃபா பரிசோதகர் குழுவொன்று சுற்றுலா மேற்கொண்டது.

இச்சுற்றுலாவின் இறுதித் தினமான கடந்த புதனன்று, மண்டேலா ஃபீஃபா குழுவினரை ரோபஸ் தீவிலுள்ள நிறவெறி ஆட்சிக்கால சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றார். அங்குதான் 18 வருடகாலம் அடைக்கப்பட்டிருந்த சிறைக்கூண்டையும் குழுவினருக்கு மண்டேலா காட்டினார்.

அதன்பின் அவர் கூறுகையில், "10 வருடங்களுக்கு முன் 'வெள்ளையர் மட்டும்' ஆட்சி நீக்கப்பட்டபோது தென்னாபிரிக்காவில் பெரும் எண்ணிக்கையான மனிதப் படுகொலைகள் நடைபெறும் என முழு உலகும் ஊகம் தெரிவித்திருந்தது. ஆனால், வன்முறையைத் தவிர்த்ததன் மூலம் உலகையும் நாம் வியப்புக்குள்ளாக்கினோம். இதற்காக எமக்கு வெகுமதி அளிக்கப்படவேண்டும்.

அதனால், ஒரு சிறந்த பரிசாக, உலகக் கிண்ணப் போட்டிகளை இங்கு நடத்த வேண்டும். உலகம் இதைச் செய்வதற்கு கடமைப் பட்டிருக்கிறது என எண்ணுகிறேன்."

- இவ்வாறு 85 வயதான மண்டேலா கூறினார்.

ஃபீஃபா குழுவுக்குத் தலைமை தாங்கிய பெல்ஜிய உதைபந்தாட்டச் சங்கத் தலைவரான ஜான் பீட்டர்ஸ், மண்டேலாவின் கோரிக்கைக்கு பதிலளிக்கையில்,

"உலகக் கிண்ண உரிமைக்கான போட்டியில் எந்தநாடு வெல்லும் என்பது தொடர்பாக பேசுவதற்கு நாம் அனுமதிக்கப்படவில்லை என்பது உங்களுக்குத் தெரியும்.

ஆனால், உங்கள் ஏற்பாட்டுக் குழுவினர் மிகச் சிறந்த பணியைச் செய்திருக்கின்றனர் என்று என்னால் உறுதியளிக்க முடியும்" என்றார்.

உலகக் கிண்ணப் போட்டிகளை நடத்த தென்னாபிரிக்கா உத்தேசித்துள்ள 8 இடங்களையும் இக்குழுவினர் பார்வையிட்டனர்.

2006ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்தும் உரிமையை, சர்ச்சைக்குரிய ஒரு வாக்கினால் ஜேர்மனியிடம் இழந்தது தென்னாபிரிக்கா.

2010ஆம் ஆண்டில் இப்போட்டிகளை நடத்துவதற்கு மொரோக்கா, எகிப்து, லிபியா, துனூஷியா ஆகிய நாடுகளும் விண்ணப்பித்துள்ளன.

# விளையாட்டு

## ரொனால்டோவின் கழக மாற்றத்திற்காக மேலும் 114 கோடி ரூபா வழங்க உத்தரவு

...பந்தாட்ட வீரர் ... இண்டர் மிலான் கழகத்திலிருந்து தனது கழகத்தில் சேர்த்தமைக்காக இண்டர் மிலான் கழகத்திற்கு ரியல் மட்ரிட் கழகம் மேலும் ஒரு கொடி யூரோ (சுமார் 114 கோடி ரூபா) பணம் வழங்க வேண்டும்" -இவ்வாறு சர்வதேச கால்பந் தாட்டச் சம்மேளனம் (ஃபீஃபா) அறிவித்துள்ளது.

ரொனால்டோவின் இடமாற்றம் தொடர்பான ஒப்பந்தக் கடப்பாடுகளை பூரணமாக நிறைவேற்றத் தவறியமையே இதற்குக் காரணம்.

இத்தாலியின் இண்டர் மிலான் கழகத்திற்காக விளையாடிய ரொனால்டோ, கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் ஸ்பெயினின் ரியல் மட்ரிட் கழகத்திற்கு மாறினார். இதற்காக 4.5 கோடி டொலர் (சுமார் 450 கோடி ரூபா) ஒப்பந்தமொன்றை இரு கழகங்களும் மேற்கொண்டன.

இந்த ஒப்பந்தத்தின்படி, ரியல் மட்ரிட் கழகத்தின் வீரரான சண்டியாகோ சோலாறி, இண்டர் மிலான் கழகத்தில் இணைந்து கொள்ளவேண்டும். ஆனால், இண்டர் மிலான் கழகத்தில் இணைவதற்கு ஆர்ஜென்ரீன வீரரான சோலாறி மறுத்துவிட்டார்.

இவ்விவகாரம் தொடர்பாக ஃபீஃபாவிடம் முறையிடப்பட்டது. இது குறித்து விசாரணை நடத்திய ஃபீஃபா இண்டர் மிலான் கழகத்திற்கு 10 மில்லியன் யூரோ வழங்குமாறு உத்தரவிட்டுள்ளது.

இத்தொகையின் முதல் தவணைப் பணம் 30 நாள்களுக்குள் வழங்கப்பட வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. அதேவேளை, இத்தீர்ப்புக்கு எதிராக 20 நாள்களுக்குள் மேன்முறையீடு செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.7

திருநெல்வேலி முடமாவடி ஞானவைரவர் விளையாட்டுக் கழகம், பூபாலசிங்கம் ஞாபகார்த்தமாக நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணி முதல் மின் ஒளியில் நடைபெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

இரவு 7 மணி - கிளிநொச்சி மாவட்ட அணி எதிர் யாழ். பல்கலைக்கழக அணி.

இரவு 8மணி - காங்கேசன்துறை கே.கே.எஸ்.வி.க. எதிர் இளையாணன் மத்திய வி.க. (எ-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,நவ.07

யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 4 மணி முதல் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 4 மணி - யாழ். பல்கலைக்கழக அணி எதிர் நாவாந்துறை சென். மேரிஷ் வி.க. அணி.

★ மாலை 5.15 மணி- சென். மேரிஷ் வி.க. எதிர் கொக்குவில் பொற்பதி வி.க. (எ-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,நவ.7

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் ஹற்றன் நஷனல் வங்கி நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று மாலை 4.30 மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரி ஆடுகளத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் பரியோவான் கல்லூரியும் யாழ். மத்திய கல்லூரியும் மோதுகின்றன. (ஒ-3)


### சங்கானை
### பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ.)
#### பழைய இரும்பு விற்பனைக்குண்டு

எமது சங்கத்தின் மின்தறி ஆலையில் கழிக்கப்பட்ட பழைய இரும்பு விற்பனைக்குண்டு. தேவையானோர் காரியாலய நேரத்தில் வந்து பார்வையிட்டு கூறுவிலையினை பொது முகாமையாளர், சங்கானை ப.நோ.கூ.சங்கம், சங்கானை என்ற விலாசத்துக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*விண்ணப்பமுடிவு திகதி: 15.11.2003 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணி.*

பொது முகாமையாளர்,
சங்கானை ப.நோ.கூ.சங்கம்.

(சி-31173) (31-12-11)



### கல்வியியல் வெளியீட்டு நிலையம் நடத்தும் "கல்வியியலாளன்" ஆய்வு இதழ் வெளியீடு - 2003

இடம் : நூலகக்கேட்போர்கூடம், யாழ். பல்கலைக்கழகம்
காலம் : நாளை (08.11.2003) சனிக்கிழமை பி.ப. 3 மணி.

மேற்படி வெளியீட்டு நிகழ்வுக்கு கல்விப்புலம்சார் சமூகத்தினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

★ *பிரதி ஒன்றின் விலை – ரூபாய் 250/=*

கல்வியியல் வெளியீட்டு நிலையம்
யாழ்ப்பாணம்.

*விளம்பர அனுசரணை:*

ஸ்ரீ கார்த்திகா நகைத் தொழிலகம்
(290) 212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(24492) (31-11-12)


### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 25 . 11 . 1937



மறைவு 09 . 10 . 2003

#### திருமதி தம்பு இலட்சுமி

அம்மா!
சோற்றுடன் பாசம் குழைத்து
ஊட்டிய உங்கள் கைகளுக்காக
எங்கள் தலைகள் ஒருமுறை குனியும்...!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

நாளை (08.11.2003) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*நீதிமன்ற வீதி, மல்லாகம்* (24490) (31-10-12)

பிரிவால் வருந்தும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


### உடன் தேவை

தொலைத் தொடர்பு நிலையத்திற்கு அனுபவமுள்ளவர் தேவை.
சைனீஸ் உணவுச்சாலைக்கு முகாமையாளர், உணவு பரிமாறுபவர் உடன் தேவை.

தொடர்பு:
ராஜா திரையரங்கு,
யாழ்ப்பாணம்.

(சி-31172) (31-11-12)



### புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஐப்பசி மாதம் 21ஆம் நாள் இன்று (07-11-2003) வெள்ளிக்கிழமை, காலை 05.25மணி முதல் 07.21 மணிவரையுள்ள ரேவதி நட்சத்திரம் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்,

*எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற*

'மிலேனியம் சுப்பர் மாக்கெட்'

என்னும் புதுக்கடையை ஆரம்பிக்கவுள்ளதால் அத்தருணம், எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

*76/60, இராமநாதன் வீதி (பல்கலைக்கழக வீதி), கலட்டி, யாழ்ப்பாணம்.*

உரிமையாளர்: சுகுமாரன்
மிலேனியம் றெஸ்ரோரன்ஸ்.

(24493)(32-11-12-31)


### துயர் பகிர்கின்றோம்

நல்லூர் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கிராம அலுவலர் (J/113) திரு.வேலாயுதசேயோன் அவர்களின் அன்புத் தாயார்

#### வீரசிங்கம் இரத்தினம்

அவர்களின் மறைவினால் துயருறும் அவர் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, பிரிவுத்துயரில் நாமும் பங் கேற்று, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச்சங்கம்,
பிரதேச செயலகம், நல்லூர்.

(24491)(11-12-31)

## மரண அறிவித்தல்கள்

### அருட்சகோதரி மேரி ஒடில் மரியாம்பிள்ளை

#### (திருக்குடும்ப சகோதரி)

கரம்பனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவரும் தற்போது இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடத்தில் வசித்துவந்தவருமான அருட்சகோதரி மேரி ஒடில் மரியாம்பிள்ளை அவர்கள் நேற்று (06.11.2003) வியாழக்கிழமை இளவாலையில் காலமானார்.

இவரது நல்லடக்க ஆராதனை இன்று (07.11.2003) வெள்ளிக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் நடைபெற்று இரங்கல் திருப்பலியின் பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*திருக்குடும்ப மாகாண இல்லம், 121, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.* (சி-31171) (31-11-12)

தகவல்:
மாகாணத் தலைவி,
அருட்சகோதரி
அன்சில்லா ஜேம்ஸ்.

### சின்னத்தம்பி கந்தையா

#### (முன்னாள் பிரபல வர்த்தகர், மாத்துறை)

யாழ்ப்பாணம், நல்லூரைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தையா அவர்கள் நேற்று (06.11.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவஞானமுதலியார் - சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மருமகனும் லீலாவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஆறுமுகம், சின்னையா கண்மணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் தர்மகுலசிங்கம் (ரவி - K.T.M. Oil Mill, கல்வியங்காடு), ரகுநாதன் (Electronic Center), ரூபராணி (மனையியல் போதனாசிரியர்), ஜெயராணி (ஆசிரியை - கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மங்கையர்க்கரசி, பரிமளாதேவி (ஆசிரியை, வவுனியா), Dr.சத்தியமூர்த்தி (பதிவாளர், யாழ். போதனா வைத்தியசாலை), ரவீந்திரநாதன் (Janssen Pharmaceutica - கொழும்பு) ஆகியோரின் மாமனாரும், கௌசிகன், விபுலன், பபுஜன், கௌசிகா, சுதாஜினி, தர்ஷன், சத்தியரூபன், சாருஜன், அபிராமி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (09.11.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு ரேமண்ட் மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*41, இராஜ வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.* (24489) (31-11-12)

தகவல்:
ரவி (மகன்),
Dr. சத்தியமூர்த்தி (மருமகன்).

# நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு மழையால் சிரமம்!

வலி. வடக்கு,நவ.7

வலிவடக்கில் இருந்து இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் தற்போது பெய்யும் மழையால் பல்வேறு சிரமங்களை அடைய நேரிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களின் கூரைகள் நீண்டகாலமாக சீர்ப்படுத்தப்படாது இருப்பதுடன் மலசலகூடங்களும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்குறைகள் பற்றி அரச அதிகாரிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடம் தெரிவிக்கப்பட்ட போதிலும் எந்த வகையான முன்னேற்றகரமான செயற்பாடுகளும் பல நலன்புரி நிலையங்களில் மேற்கொள்ளப்படவில்லை.

வலிகாமம் மற்றும் வடமராட்சி பகுதிகளில் சுமார் 52இற்கும் மேற்பட்ட இடம பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்கள் காணப்படுகின்றன.

தொடர்ந்து பெய்யும் மழை காரணமாக படுக்கவோ, சமைக்கவோ முடியாத நிலைமையில் சில நலன்புரி நிலையங்கள் உள்ளன. அத்துடன் மலசலகூடங்கள் பலவும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன.

இதேநேரம் அப்பகுதியில் சுகாதார சீர்கேடுகள் ஏற்படுவதன் மூலம் தொற்றுநோய்கள் பரவக்கூடிய அபாய நிலையிலும் இம்முகாம்கள் காணப்படுகின்றன.

மழை காலம் தோன்றியுள்ள நேரத்திலாவது நலன்புரி நிலையங்களின் நலனில் உரிய அலுவலர்கள் அக்கறை காட்ட வேண்டும் என நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

கடந்த காலங்களிலும் மழைகாலத்தில் பல்வேறு நோய்த்தாக்கங்களுக்கு இந்த நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்கள் உள்ளாகியமை குறிப்பிடத்தக்கதாகும். (ஒ-86)

**சுன்னாகத்தில் பெண் மரணம் குறித்த விசாரணை:**

# கருக்கலைப்புச் செய்த பெண் பரம்பரை முறிவு நெறிவு வைத்தியர்

வலி.வடக்கு,நவ.7

சட்டவிரோதமாக கருக்கலைப்புச செய்துகொண்ட பெண் ஒருவர் சுன்னாகத்தில் மரணமான சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டுள்ள மருத்துவர், ஆயுள்வேத வைத்தியர் எனக் கூறப்படுவது தவறானது என்று நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தான் ஒரு பரம்பரை வைத்தியர் என்பதை அப்பெண் நீதிவான் முன்னிலையில் ஒப்புக்கொண்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள பெண் எந்த ஒரு வைத்தியத் துறையிலும் முழுமையான கற்றலை மேற்கொள்ளவில்லை என்றும் -

பரம்பரை பரம்பரையாக முறிவு நெறிவு நோய்க்கு வைத்தியம் செய்பவர் என்றும் -

நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

இவரிடம் கருக்கலைப்பு செய்து கொண்ட சுன்னாகத்தைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தாயார் பின்னர் உயிரிழந்தமை தெரிந்ததே. (ம-86)

## ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சைக்கு இங்கிருந்து 24 ஆயிரம் பேர் தோற்றுவர்

யாழ்ப்பாணம்,நவ.7

இந்த ஆண்டு ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்கு யாழ். மாவட்டத்திலிருந்து 24 ஆயிரத்து 193 மாணவர்கள் தோற்றவுள்ளனர் என்று யாழ். கல்வி வலயம் தெரிவித்தது.

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல 12ஆம் திகதிவரை பரீட்சைகள் நடைபெறும். யாழ்.மாவட்ட பாடசாலைகளில் இருந்து 15 ஆயிரத்து 390 மாணவர்களும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக 8 ஆயிரத்து 803 பேரும் தோற்றவுள்ளனர். (ம-7)

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

## சந்தைகள், இறைச்சிக் கடைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2004

01.கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: 2003-11-17 பிற்பகல் 14.00 மணிவரை

02.கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி: 2003-11-18 பிற்பகல் 12.00மணிவரை

03.கேள்விகள் திறக்கப்படும் திகதி: 2003-11-18 பிற்பகல் 15.00மணி

04.ஏனைய விவரங்கள் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விவரம் | மாத வாடகை சபைக்கு செலுத்த வேண்டியது | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் மீளளிக்கக் கூடியது | கேள்விப் பத்திரப் பணம் மீளளிக்கப்படாதவை |
|---|---|---|---|---|
| **சுழிபுரம் உப அலுவலகம்** | | | | |
| 1. சத்தியக்காட்டுச்சந்தை (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு உட்பட) | | 291,632.00 | 5000.00 | 250.00 |
| 2. பல்லசுட்டி சந்தை (தற்காலிக சந்தை கேள்விக்காரர் ஒழுங்கு செய்தல்) | | 5,500.00 | 500.00 | 250.00 |
| 3. தொல்புரம் மத்திய சந்தை | | 11,770.00 | 1000.00 | 250.00 |
| 4. பொன்னாலைச் சந்தை (மூளாய்) | | 33,000.00 | 1000.00 | 250.00 |
| **சங்கானை உப அலுவலகம்** | | | | |
| 1. மரக்கறிச்சந்தை (துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு உட்பட) | | 1,221,330.00 | 5000.00 | 250.00 |
| 2. மீன்சந்தை (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு உட்பட) | | 234,300.00 | 5000.00 | 250.00 |
| **வட்டுக்கோட்டை உப அலுவலகம்** | | | | |
| 1. வட்டுக்கோட்டை பொதுச்சந்தை (இறாத்தலடி) | | 16,170.00 | 500.00 | 250.00 |
| 2. சங்கரத்தை தற்காலிக சந்தை | | 89,210.00 | 2000.00 | 250.00 |

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விவரம் | மாத வாடகை சபைக்கு செலுத்த வேண்டியது | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் மீளளிக்கக் கூடியது | கேள்விப் பத்திரப் பணம் மீளளிக்கப் படாதவை |
|---|---|---|---|---|
| **அராலி உப அலுவலகம்** | | | | |
| 1. தற்காலிக சந்தை (கேள்விக்காரர் ஒழுங்கு செய்தல்) | | 1,430.00 | 200.00 | 250.00 |
| **சங்கானை உப அலுவலகம்** | | | | |
| 1. மாட்டிறைச்சிக்கடை | 100/- | 170,853.10 | 3000.00 | 250.00 |
| 2. ஆட்டிறைச்சிக்கடை | 100/- | 14,025.00 | 500.00 | 250.00 |
| 3. கருவாட்டுக்கடை | 75/- | 6,710.00 | 500.00 | 250.00 |
| **வட்டுக்கோட்டை உப அலுவலகம்** | | | | |
| 1. மாட்டிறைச்சிக்கடை | 75/- | 19,284.10 | 500.00 | 250.00 |

குறிப்பு: தங்களால் செலுத்தப்படும் கேள்வித் தொகை, கேள்விப்பத்திரப்பணம், மாதவாடகை ஆகியவற்றிற்கு வற் வரி 20% சேர்த்து அறவிடப்படும் என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
வலி.மேற்குப் பிரதேச சபை, சுழிபுரம்.
(21-19-15-25) (சி-31163)

**திருமதி சோ.ஜெயந்தா**
பதில் செயலாளர், வலி.மேற்குப் பிரதேச சபை, சுழிபுரம்.

# அரசாங்க அறிவித்தல்

## கூறுவிலை கோருதல்

மனிதவள மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக பின்வரும் பொருள்களை கொள்வனவு செய்வதற்கு, இப்பொருள்களை விற்பனை செய்யும் நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

| பொருள்களின் பெயர் | தொகை |
|---|---|
| 1. Toner - HP Laser Jet 1300 | 5 |
| 2. Computer Table 4'x1.8'x2.5' (Wood) | 10 |
| 3. Computer Chairs (Revolving) | 12 |
| 4. Stabilizer Servo Type - 1000W (Goldsource) | 5 |

2. கூறுவிலைகளை சமர்ப்பிக்க விரும்பும் வியாபார நிறுவனங்கள் மீளளிக்க முடியாத கேள்விவைப்பாக ரூபா 500 இனை யாழ். மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கூறுவிலைப் படிவங்களை 2003.11.10ஆம் திகதி தொடக்கம் 2003.11.18ஆம் திகதிவரையிலான காலப்பகுதியில் அலுவலக நாள்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
3. கூறுவிலைகளை சமர்ப்பிக்க விரும்பும் வியாபார நிறுவனங்கள் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக ரூபா 5,000 ஐ. யாழ். மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டின் பிரதியை கூறுவிலை கோருதல் விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.
4. பூரணப்படுத்தப்பட்ட கூறுவிலைப் பட்டியலை இரு பிரதிகளில தலைவர் மாவட்ட கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீளத்தபால் உறையில் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலக திட்டப்பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2003.11.18 ஆம் திகதி ந.ப.12.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பி.ப.2.00 மணிக்கு கூறுவிலைகள் திறக்கப்படும். அப்பொழுது கூறுவிலை கோரியவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் சமுகமளிக்கமுடியும்.
5. கூறுவிலைகள் உள்ளடக்கிய தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் "மனிதவள மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான பொருள்களின் கூறுவிலைகள்" எனக் குறிப்பிடல் வேண்டும்.
6. ஏற்றுக்கொள்ளப்பட்ட கூறுவிலை கோரியவர்கள் 7 நாள்களுக்குள் என்னால் வழங்கப்பட்ட வழங்கு கட்டளைகளுக்குப் பொருள்களை வழங்குதல் வேண்டும்.
7. இவ் விளம்பரத்தில் கூறப்பட்டுள்ள பொருள்களின் மாதிரிகளுக்கும் தரங்களுக்கும் இணங்க இப்பொருள்களை வழங்கக்கூடியவர்கள் மட்டுமே இக்கூறு விலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். வேறு மாதிரிகளும் தரங்களும் சமர்ப்பிக்கப்படின் அவை இரத்துச் செய்யப்படும் என்பதனை கூறுவிலை சமர்ப்பிப்பவர்களின்கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன்.

செ.பத்மநாதன்,
தலைவர்/அரசாங்க அதிபர்,
மாவட்டக் கேள்விச் சபை,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

C/3 1165) (25-11-12-32)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்




உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 2135494 இருந்து 2153218 வரை

சீட்டிழுப்பு இல. 1450

திகதி 05.11.2003

## வெற்றி எண்கள்

**48 53 54 55 57**

போனஸ் எண் **10**

## ஜக்பொட் பரிசு

**ரூபா.2,369,100/-** வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 2,369,100/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 118 | 10,000/- | 1,180,000/- |
| 3 | 5,450 | 500/- | 2,725,000/- |
| 2 | 90,844 | 20/- | 1,816,880/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 48ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 111,850 | 10/- | 1,118,500/- |

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட் **ரூபா.3,230,650/-**

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.7,040,380/-

தொடர் இல. 3110666க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 நவம்பர் 08ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2144000-3-57
2144428-2-56
2138231-6-59
[illegible]
2137849-9-07

வளமான வாழ்வுக்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

# திருவடிநிலை மயானம் செல்வதற்கு அனுமதி பெறும் நிலை நீங்கவேண்டும்

## அதற்கு ஆவன செய்யுமாறு அரச அதிபரிடம் கோரிக்கை

சுழிபுரம் பகுதியில் அமைந்துள்ள திருவடிநிலை மயானத்திற்குச் செல்வதற்குக் கடற்படையினரிடம் அனுமதி பெறும் நடைமுறையை நீக்குவதற்கு ஆவன செய்யுமாறு சுழிபுரம் மக்கள் சார்பாக யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நீண்ட மகஜர் ஒன்றையும் அவர்கள் அரச அதிபருக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

எந்த நேரத்திலும் தகனக்கிரியைகளை மேற்கொள்வதற்கும் அந்தியேட்டிக் கிரியைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் தமக்கு வசதி செய்துதரப்படவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

"இதுவரை நாம் பட்ட கஷ்டங்கள் போதும். நாட்டில் சமாதான சூழல் ஏற்பட்டு அவசரகாலச் சட்டம் செயலிழந்துள்ள நிலையில் எமக்கு ஏன் இந்த அவலநிலை தொடர்கிறது என்று தெரியவில்லை" என்று தமது கவலையை அவர்கள் மகஜரில் வெளியிட்டுள்ளனர்.

திருவடிநிலைப் பிரதேசம் வலி. மேற்கு மக்களுக்கு ஒரு புனித இடமாக விளங்குகிறது என்பதும் மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-28)

# துயிலும் இல்லங்களில் சிரமதானம்

கோப்பாய்,நவ.7

மாவீரர் நாள் நெருங்குவதையிட்டு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தச் சிரமதானப் பணியில் குடாநாட்டின் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பொதுமக்களும் கூட்டம் கூட்டமாக ஈடுபட்டு வருகின்றனர்.

எதிர்வரும் 27 ஆம் திகதி மாவீரர் தினம் ஆகையால் அதற்கு முன்னர் 21 ஆம் திகதி மாவீரர் எழுச்சிவார நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன. அன்றையதினம் காலை 8.30 மணிக்கு தேசியக் கொடியேற்றலுடன நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன. இக்காலப் பகுதியில் மரநடுகை, சிரமதானம் என்பனவும் இடம்பெறவுள்ளன.

இதேசமயம் கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையம், கைதடி வணிகர் கழகம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் கொண்ட குழுவொன்று கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணியில் ஈடுபட்டது. இதில் சுமார் 100 பேர் வரையில் கலந்துகொண்டனர்.(ஓ-10-72-75)

### திருமுறை பாராயணம்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் பௌர்ணமி தினத்தில் நடத்தி வரும் அகத்தியர் தேவாரத்திரட்டு, முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் ஆகியவை நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் கல்வியங்காடு, புலவனார் வீதி, ஸ்ரீநடராஜ முக்குறுணிப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறும்.

### வரதராஜப்பெருமாள் வித்தியாசாலை தரம் உயரும்

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் வித்தியாலயம் 2004 ஆம் ஆண்டு முதல் தரம் உயர்த்தப்படவுள்ளது. இதுவரை இவ்வித்தியாலயத்தில் தரம் ஒன்று முதல் தரம் எட்டு வரையான வகுப்புகளே இருந்து வந்தன. எதிர்வரும் ஜனவரி முதல் தரம் 9 வகுப்பும் சேர்த்துக்கொள்ளப்படும் என்று வித்தியாலய அதிபர் வீ.மீனேஸ்வரன் இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தார்.

இத்தரம் உயர்வு பற்றிய கடிதம் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனினால் வித்தியாலய அதிபருக்கு கடந்த வாரம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ம-135)

### முழுநிலா நாள் கருத்தரங்கு

அகவொளி நிலையத்தால் நடத்தப்படும் முழுநிலா நாள் கருத்தரங்கு நாளை பிப 3.30 மணிக்கு அகவொளி நிலையத்தில் நடைபெறும். இதில் 'மரபுவழி பண்டுகளின் தோற்றம்' என்னும் தலைப்பில் அருட்திரு. போல் றொகான் கருத்துரை வழங்குவார்.



இலங்கை வர்த்தக வங்கியின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட 'நட்சத்திரங்களின் உதைபந்தாட்டப்' போட்டியில் வெற்றி பெற்ற தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் உதைபந்தாட்ட அணித் தலைவரிடம் வெற்றிக்கேடயத்தை வழங்குகிறார் வர்த்தக வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் ஏ.ஆர்.குலேந்திரன். (ஒ-180)

# நெடுந்தீவு காடு வளர்ப்புக்கு மரங்கள் பெற்றுத்தரக் கோரிக்கை

நெடுந்தீவு,நவ.7

நெடுந்தீவு பிரதேசத்தில் காடு வளர்ப்புத் திட்டத்துக்கு மேலும் அதிக நல்லின மரக்கன்றுகளைப் பெற்றுத்தருமாறு நெடுந்தீவு கிழக்குக் கிராம அலுவலரால் உதவி அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு கிழக்கில் உள்ள ஆலமாவனம் கிராமத்தில் 50 ஏக்கர் விஸ்தீரணத்தில் இந்தக் காடு வளர்ப்புத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இந்த இடத்தில் ஒல்லாந்தர் காலத்தில் கொண்டுவரப்பட்ட 'தினக்கு' என்னும் மரங்கள் உட்படப் பல மரங்கள் உள்ளன.

இவற்றுடன் மேலும் 500 வரையான மரக்கன்றுகளை நடக்கூடிய வசதியுள்ளமையால் நல்லின மரக்கன்றுகளை அங்கு நடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய மழைக்காலத்தைப் பயன்படுத்தி மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பது இலகு என்பதால் இவற்றைப் பெற்றுத்தருமாறு கிராம அலுவலர் ப.கதிரேசு உதவி அரச அதிபர் ச.பேரானந்தத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-10-111)

# குடாநாட்டு விவசாயிகள் பெற்ற நீண்டகாலக் கடனின் நிலைப்பாடு என்ன?

குடாநாட்டு விவசாயிகளுக்கு நெற்செய்கை மற்றும் பணப்பயிர்களான வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு ஆகிய பயிர்ச்செய்கைகளுக்குக் குறைந்த வட்டியில் ரூபா 50 ஆயிரத்துக்கு உட்பட்ட தொகையைக் கடனாக வழங்க இலங்கை வங்கி முன்வந்திருப்பதாகக் கூறப்படுகிறது. இது மிகவும் பாராட்டத்தக்க ஒரு செயலாகும். இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் கடந்த கால் நூற்றாண்டு கால இடைவெளிகுப் பின்னர் குடாநாட்டு விவசாயிகளுக்குக் கிடைக்கும் வரப்பிரசாதம் என்றே இதனைக் கூறலாம்.

1950களில் குடாநாட்டு விவசாயிகளுக்கு இத்தகைய கடன் வழங்கும் நிறுவனமாக கிராமங்கள்தோறும் "ஐக்கிய நாணய சங்கம்" என்னும் ஓர் அமைப்பு கூட்டுறவுத் திணைக்களத்தின் கீழ் சிறந்த முறையில் செயற்பட்டுவந்தது.

வருடந்தோறும் விவசாயக்கடனாக அந்தக் காலத்தில் பல நூறு




ரூபாய்களைக் குறைந்த வட்டியில் விவசாயிகளுக்கு வழங்கிய அச்சங்கம், ஒரு வருடத்தவணையில் வட்டியையும், முதலையும் மீளப்பெற்று வந்தது. விவசாயிகளும் மிக நாணயமான முறையில் கடனை வட்டியுடன் திருப்பச் செலுத்தும் ஒழுங்குமுறையைக் கடைப்பிடித்து வந்தார்கள். இந்தச் சங்கங்கள் இப்போது மறைந்துவிட்டன.

பின்னர் 1960 களில் ஐக்கிய விளைபொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் ஐக்கிய நாணய சங்கங்களின் இடத்தை வகித்து கமத்தொழில் சேவைத் திணைக்களத்திடம் இருந்து பணத்தைப் பெற்று, விவசாயக் காணி உறுதிகளை அடமானமாகப் பெற்று குறைந்த வட்டியில் விவசாயிகளுக்கு கடன் வழங்கிக் குறித்த காலத் தவணையில் கடனையும் வட்டியையும் மீளப்பெற்றுவரும் நடைமுறையைச் செயற்படுத்தி வந்தன. இத்தகைய கடன்கள் பெரும்பாலும் நீர் இறைக்கும் இயந்திரங்கள் கொள்வனவு செய்பவர்களுக்கே வழங்கப்பட்டன.

1971இல் ஐக்கிய கூட்டுறவு விற்பனைச் சங்கம், விளைபொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் ஆகியன ஒன்றிணைக்கப்பட்டு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் என்னும் பெயரில் புனரமைப்புச் செய்யப்பட்டதன் பின்னர், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களே இத்தகைய விவசாயக் கடன்களை விவசாயிகளுக்கு வழங்கிவந்தன.

1977 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தனா தலைமையில் ஐ.தே. கட்சி ஆட்சிக்கு வந்ததும் அந்த வருடத்தில் விவசாயக் கடனாக ஒரு விவசாயிக்கு தலா ரூபா ஐயாயிரம் வீதம் நாடளாவிய ரீதியில் மக்கள் வங்கியில் இருந்து பணத்தைப் பெற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

குடாநாட்டில் பெரும்பாலான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இத்திட்டத்தைப் பயன்படுத்தி இத்தகைய கடனை மிகப் பெரிய அளவில் மக்கள் வங்கியில் இருந்து பெற்று தனது அங்கத்துவ விவசாயிகளுக்கு வழங்கியிருந்தன.

இவ்வாறு கடனைப் பெற்ற விவசாயிகளில் அதிகமானவர்கள் குறிப்பிட்ட தவணைக் காலத்தில் வட்டியுடன் கடனைத் திருப்பிச்செலுத்தப் பின்னடித்துவிட்டனர். பலர் முற்றாகச் செலுத்தினர். பலர் காலவாசி, அரைவாசி, முக்கால்வாசி பங்கு என்று செலுத்தினர். பலர் எதுவுமே மீளச் செலுத்தவில்லை. இவ்வாறு செலுத்தாதவர்களில் கணிசமான தொகையினர் இன்று மறைந்துவிட்டனர்.

இவ்வாறு கடனாகப் பெற்ற பல லட்சம் ரூபாய்களை மக்கள் வங்கிக்குத் திருப்பிச் செலுத்தாததன் காரணமாக, 1978 ஆம் ஆண்டில் இருந்து குடாநாட்டுப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மக்கள் வங்கியிடம் இருந்து தொடர்ந்து கடன் பெற்றுத் தமது அங்கத்துவ விவசாயிகளுக்கு வழங்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டன.

**சி.கிருஷ்ணபிள்ளை**
*பொதுச்சபைப் பிரதிநிதி,*
*வலி. கிழக்கு ப.நோ.கூ.ச.*

பெற்ற கடனைத் திருப்பச் செலுத்தாததன் காரணமாக மக்கள் வங்கியும் இத்தகைய கடன் திட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

இந்தவகையில், அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இத்தகைய விவசாயக் கடனாக வட்டியின்றி முதலாக மட்டும் 78 லட்சத்து 8 ஆயிரத்து 860 ரூபாவை செலுத்தவேண்டியுள்ளது என்று சங்கத்தின் பதிவேடுகளில் இருந்து அறியமுடிகிறது.

கடன் தொகை முழுவதையும் வட்டியுடன் செலுத்தாததன் காரணமாக ஒழுங்கான முறையில் கடனையும் வட்டியையும் செலுத்திய விவசாயிகளுக்குக்கூட 1978 ஆம் ஆண்டின் பின் விவசாயக் கடன்பெற முடியாதநிலையில் அச்சங்கம் இருந்தது.

சிலரின் முயற்சியால் 1977 - 1994 ஆம் ஆண்டுக் காலத்திற்குரிய விவசாயக் கடன் பிரச்சினை சம்பந்தமாக 2001.02.09 ஆம் திகதி மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரால் நாடாளுமன்றத்தில் கேள்விகள் எழுப்பப்பட்டன.

அப்போதைய பிரதி நிதி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்காவும் விவசாய அமைச்சர் டி.எம்.ஜயரத்னவும் அக்கேள்விகளுக்குப் பதில் அளித்தனர்.

இருவரும் அளித்த பதிலின் சாராம்சம் பின்வருமாறு:-

"1977 - 1994 ஆம் ஆண்டு வரையில் விவசாயக் கடன்பெற்ற விவசாயிகளின் கடனுக்கான வட்டியை பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு 1994 இல் பதவிக்கு வந்ததும் தள்ளுபடி செய்தது.

பின்னர் இக்கடனில் 75 வீதமானவற்றை அரசு பொறுப்பேற்று விவசாயிகளைக் கடனில் இருந்து விடுவித்தது.

இதன்படி, வட்டியின்றி முதலில் 25 வீதமானவற்றை திருப்பச்செலுத்தியவர்கள் 75 வீதமான கடனில் இருந்து விடுவிக்கப்பட்டுவிட்டார்கள்.

25 வீதமான கடனையாவது திரும்பச் செலுத்தாதவர்களின் விவகாரம் "கிராம நடுவர் மன்றத்தினால் விசாரணை செய்யப்பட்டு தீர்மானிக்கப்படும்" என்பதாகும்.

இந்த விடயம் 12.01.2002 ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் செய்தியாக வெளிவந்துள்ளது.

இவ்விடயத்தை நான் பத்திரிகை நறுக்குடன் 20.02.2001 இல் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஆகியோர்களுக்கு கடிதம் மூலம் தெரிவித்திருந்தேன். ஆயினும், அவற்றுக்குரிய பதில் கிடைக்கவில்லை.

தற்போதைய கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் ஏ.ஆர்.எம்.அப்துல் காதருக்கு இவ்விடயம் சம்பந்தமாக கடிதம் அனுப்பியபோதிலும், எதுவித பதிலும் கிடைக்கவில்லை.

27.01.2003 இல் இவ்விடயத்தை வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜெயவர்த்தனவின் கவனத்துக்கு கொண்டுவந்தேன்.

ஆளுநர் வடக்கு - கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருடன் தொடர்புகொண்டு பெற்றுத் தந்த பதிலில் ஆணையாளர்,

"விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட விவசாயக் கடன்மீதிகளை அவர்களிடமிருந்து அறவீடு செய்யாது விடுவதற்கான அறிவுறுத்தல்கள் எதுவும் எமது அமைச்சு மூலமோ மக்கள் வங்கி மூலமோ அல்லது திறைசேரி மூலமாகவோ கிடைக்கப்பெறாமையால் குறிப்பிட்ட காலப் பகுதிக்கான விவசாயக் கடன்கள் யாவும் கடன் பெற்றுக்கொண்ட உறுப்பினர்களிடம் இருந்தே வருமதியாகக் காட்டப்பட்டு வருகிறது" என்று குறிப்பிட்டிருந்தார்.

அதேவேளை, இரு அமைச்சர்களும் நாடாளுமன்றத்தில் பதில் அளித்தவாறு வடக்கு - கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் வட்டியில்லாமல் 25 வீதக் கடனைத் திரும்பச் செலுத்தியவர்கள் மிகுதி 75 வீதமான கடனில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்கள் என்றும், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் போர் சூழல் காரணமாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும், ஆயினும், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சில நிர்வாக மாவட்டங்களில் இந்த நீண்டகாலக் கடனைக் கவனத்தில் எடுக்காது வழமைபோன்று மீண்டும் மீண்டும் விவசாயக் கடன்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் உறுதிப்படுத்தப்படாத செய்திகள் மூலம் அறியமுடிகின்றது.

அப்படியாயின் இந்த நீண்ட - நெடுங்கால விவசாயக்கடன் சம்பந்தமாக யாழ். குடாநாட்டு விவசாயிகளின் கூட்டுறவுச் சங்கங்களின் மக்கள் வங்கியின் தற்போதைய நிலைப்பாடுகள் என்ன? இதுதான் பலதரப்பட்டவர்களின் கேள்வியாகும்.

நீண்டகாலமாக வருமதியாகவுள்ள விவசாயக் கடன்பெற்ற கடனாளிகளின் பெயர்கள் மக்கள் வங்கி கடன் மீதிகளில் காட்டப்பட்டு வருவதாக யாழ். கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகள் கூறுகிறார்கள்.

ஆனால், பெற்ற கடனில் வட்டியின்றி முதலில் 25வீதம் செலுத்தியவர்கள் 75 வீதமான கடனில் இருந்து விடுவிக்கப்பட்டுவிட்டார்கள் என்று முன்னாள் பிரதி நிதி அமைச்சரும், விவசாய அமைச்சரும் நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார்கள்.

அதேவேளை, விவசாயக்கடன் மீதிகளை அறவீடு செய்யாமல் விடுவதற்கு தனக்கு எதுவித அறிவுறுத்தலும் கிடைக்கவில்லை என்று வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் கூறுகிறார்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பெற்ற கடனைத் திரும்ப செலுத்தியே ஆகவேண்டும் என்றும் மனோபலத்துடன் மக்கள் வங்கி அதிகாரிகள் மௌனமாக இருக்கிறார்கள்.

ஆகவே, இந்த நீண்ட - நெடுங்கால - விவசாய கடன் விடயத்தில் யாழ். மாவட்ட அரச அதிபரும் மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்கள தலைவர்களும் மக்கள் வங்கி அதிகாரிகளும் ஒன்றிணைந்து சம்பந்தப்பட்ட உயர்பீடத்துடன் தொடர்புகொண்டு பிரச்சினையை இலகுவான முறையில் சுமுகமாகத் தீர்த்து வைத்தால் என்ன?

அப்படித் தீர்த்து வைக்குமிடத்து குடாநாட்டு விவசாயிகள் தங்கள் நற்பெயரைக் காப்பாற்றி வங்கிகளிடம் இருந்து மீண்டும் மீண்டும் கடன் பெற வசதி கிடைப்பது மட்டுமல்லாமல், வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள், விவசாயிகளுக்கிடையே சுமுகமாக உறவுகள் வளரவும் வழி ஏற்படும்.

✱

# இலங்கை நிலைவரத்தை நோர்வே அவதானிப்பு
# நிலைமை தெளிவாகும் வரை காத்திருக்கும்

ஒஸ்லோ,நவ.7

இலங்கை அரசியல் நிலைவரம் குறித்து நோர்வே அரசு அக்கறையுடன் அவதானித்து வருகிறது. ஆயினும், அவசரகால நிலையைப் பிறப்பித்த ஜனாதிபதியின் தீர்மானம் குறித்து கருத்துவெளியிடுவதை நோர்வே தவிர்த்துக் கொண்டிருக்கின்றது.

இலங்கை நிலைவரம் குறித்து செய்தி நிறுவனம் ஒன்று, நோர்வே வெளிவிகார அமைச்சு பேச்சாளரிடம் வினவியுள்ளது. அது குறித்து நாம் கருத்து வெளியிடமாட்டோம். சமாதான முயற்சிக்கும் தீங்கு ஏற்படுத்தமாட்டோம். நடக்கும் சம்பவங்களிலிருந்து விலகியிருக்க விரும்புகின்றோம். நிலைமை தெளிவாகும் வரை நாம் காத்திருக்கின்றோம் " என்று பேச்சாளர் கூறினார்.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நேரடிப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கச்செய்ய முயன்று வரும் நோர்வே பக்கச் சார்பாக நடந்து வருகின்றது என்று ஜனாதிபதி சந்திரிகாவினால் அடிக்கடி குற்றஞ்சாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சுய தொழில் விருத்திக்கு கடன் வழங்கும் திட்டம்
## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,நவ.7

சிறுகைத்தொழிலில் ஈடுபட விரும்புபவர்களுக்கு சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் யாழ். அலுவலகம் கடனுதவிகளை வழங்கவுள்ளது. இவ்வாறு மேற்படி நிறுவனத்தின் யாழ்.அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். குடாநாட்டில் வசிக்கும் அதேவேளை, வன்னியிலிருந்து மீள்க்குடியமர்ந்தும் வேலை அற்றிருக்கும் இளைஞர் மற்றும் யுவதிகள் மத்தியில் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் வகையில் இந்தக் கடனுதவி வழங்கப்படவுள்ளது.

இதேவேளை- தற்போது இளைஞர், யுவதிகள் சிலர் இந்தக் கடனைப்பெற்று அப்பளம் உற்பத்தி, நல்லெண்ணெய் உற்பத்திகளை மேற்கொண்டுள்ளனர்.

கடனுதவி பெறவிரும்புவோர் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் யாழ். அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (எ-7)

### இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.7

புங்குடுதீவு, ஊரதீவு அறிவக முன்பள்ளி மேம்படுத்துலுக்கான ஆரம்ப நிகழ்வு இன்று முற்பகல் 9.30 மணிக்கு மேற்படி முன்பள்ளியில் நடைபெறும்.

இந்நிகழ்வின்போது செயற்பாட்டு மையத்தினால் கல்வியியல் உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள், சத்துணவு, அதற்கான சமையல் உபகரணங்கள் மற்றும் ஆரோக்கியம் பேணுவதற்கான பொருள்கள் என்பனவும் வழங்கப்படவுள்ளன.

★ ★ ★

யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் அனுசரணையுடன் இயங்கவுள்ள மாதகல் புனித தோமையார் முன்பள்ளியின் ஆரம்ப நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற உள்ளது.

## அதிகாரி நியமனம்

கிளிநொச்சி மாவட்டத்துக்கான மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளராக ஆறுமுகம் கந்தசாமி நியமிக்கப்பட்டுள்ளார்.

அச்சுவேலி இடைக்காட்டைச் சேர்ந்த இவர், முன்னர் கிளிநொச்சி செயலகத்தில் பணியாற்றியுள்ளார்.(ஒ-10-173)

## தபால் ஊழியர்கள் வேலை நிறுத்தம்

புத்தளம்,நவ.7

புத்தளம் பிரதம தபால் நிலைய தபாற் சேவகர்கள் மேற்கொண்டுள்ள வேலைநிறுத்தம் நேற்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்தது.

புத்தளம் தபால் நிலையத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டு கருவல கஸ்வெவ தபால் நிலையத்திற்குச் சென்ற எம். டி. பண்டார என்பவர் அங்கு வைத்து கடந்த 31 ஆம் திகதி தாக்கப்பட்டார். அவர் புத்தளம் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதற்கு ஆட்சேபம் தெரிவித்தே கடந்த 5ஆம் திகதி முதல் தபாற் சேவகர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் தபால் விநியோகம் நடைபெறவில்லை. வடமேல் மாகாண தபால் அத்தியட்சகர் மற்றும் புத்தளம் மாவட்ட உதவி தபால் அத்தியட்சகர் ஆகியோர் நேற்று புத்தளத்திற்கு வந்து வேலைநிறுத்தக்காரர்களுடன் பேச்சு நடத்தினர். பேச்சு வெற்றியளிக்காவிட்டால் வேலைநிறுத்தம் ஏனைய இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

##### அரசியல் மாற்றங்கள் குறித்து
# வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா விளக்கம்

கொழும்பு,நவ.7

ஜனாதிபதி நேற்றுமுன்தினம் இலங்கையிலுள்ள பல வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்து இன்றுள்ள அரசியல் மாற்றங்கள் குறித்து விளக்கினார்.

ஜனாதிபதி மாளிகையில் இச்சந்திப்பு நடைபெற்றதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு நேற்றுத் தெரிவித்தது.

இந்த மாற்றங்கள் எந்த வகையிலும் சமாதான நடவடிக்கைகளைக் குழப்புவதாக அமையாதென ஜனாதிபதி வெளிநாட்டு தூதுவர்களிடம் தெரிவித்தார் என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்தது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் இந்தியத் தூதுவர் நிருபம் சென். பிரிட்டிஷ் தூதுவர் ஸ்டீவன் வெஸ்ஸ் ஆகியோருடன் ஜனாதிபதி விரிவாகப் பேச்சு நடத்தினார் என அறியப்படுகிறது.

மாலையில் அவர் அமெரிக்கத் துணைத் தூதுவர், கனடா, பிரான்ஸ், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் அகியோரைச் சந்தித்திருக்கிறார். (எ)

# காலம் கடந்த பிறப்பை பதிவு செய்ய ஏற்பாடு

தென்மராட்சி,நவ.7

சாவகச்சேரி நகரசபை சனசமூக நிலையங்களின் சமாசத்தினர், இப்பகுதியில் இலவச திருமணப் பதிவினையும், காலங்கடந்த பிறப்புப் பதிவினையும் விரைவில் நடத்தவுள்ளனர்.

திருமணப் பதிவினை மேற்கொள்ளாத வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களுக்கும், வன்னியிலிருந்து மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கும் இந்தச்சேவை வழங்கப்படும்.

பதிவுகளை மேற்கொள்ள விரும்புவோர் தத்தமது பிரிவு கிராம அலுவரின் அல்லது சனசமூக நிலையம் அல்லது தென்மராட்சி பிரிவு பதிவு காரரிடம் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம் என்று பதிவுகாரர் க.மோகன்ராசலிங்கம் அறிவித்துள்ளார்.

காலங்கடந்த பிறப்பு பதிவினை மேற்கொள்வோர் தமது பிரிவுப் பதிவுகாரருடன் தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளைப் பெற்று கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (எ-117)

# பொலீஸ் ஆணைக்குழு வெற்றிடத்துக்குச் சிபாரிசு

கொழும்பு,நவ.7

தேசிய பொலீஸ் ஆணைக்குழுவில் ஏற்பட்டிருக்கும் வெற்றிடத்துக்கு டாக்டர் எம்.கோபாலசுந்தரத்தின் பெயரை ஜனாதிபதிக்குச் சிபாரிசு செய்வதென அரசமைப்புச்சபை தீர்மானித்திருக்கிறது.

ஆணைக்குழுவின் உறுப்பினரான திருமதி எஸ்.என்.ஈபர்ட் பதவி விலகியதாலேயே இந்த வெற்றிடம் ஏற்பட்டிருக்கிறது.

கடந்த 3ஆம் திகதி கூடிய அரசமைப்புச்சபை, அந்த வெற்றிடத்திற்கு டாக்டர் எம்.கோபாலசுந்தரத்தின் பெயரை சிபாரிசு செய்வதெனத் தீர்மானித்திருக்கிறது.


## மாபெரும் சைக்கிள், மரதன் ஓட்டப் போட்டிகள்

காலம் : நாளை (08.11.2003) சனிக்கிழமை காலை 7 மணிக்கு
இடம் : சனசமூக நிலைய முன்றில்
(முற்பதிவுகள் தேவையில்லை)

★ 60Km சைக்கிள் ஓட்டம், 10Km மரதன் ஓட்டம் ★

3ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை.
(24495) (31-12-33)

நிர்வாகம்,
உதய தாரகை ச.ச.நிலையம்.



## ஜோ. எகட்டனின்

செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ் ஸ்தாபனத்தார் - 05.11.2003 முதல் இலங்கையின் முன்னணி நிறுவனமான

மகாராஜாவின்

M.B.C. Net Works (Pvt) Ltd.

ஸ்தாபனத்தின் வடபகுதியின் விளம்பர முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதனை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றார்கள்.

உங்கள் சக்தி F.M., சக்தி T.V., Yes F.M., சிரச கிளாசிக் விளம்பரங்களை 05.11.2003 முதல் ஜோ.எகட்டன் மூலம் 24 மணிநேரமும் ஒளிபரப்பு செய்யப்படுகின்றது.

மேலதிக விபரங்களுக்கும் விசாரணைகளுக்கும்

ஜோ.எகட்டன்
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

அதிரடித் தொலைபேசி - 0777 - 032188
உள்ளகத் தொலைபேசி - 0712 - 399166,
- 222 - 7227.

உங்கள் சக்தி — எங்கள் சக்தி

சக்தி F.M.

(24485) (31-12-33)


## மணல் விநியோக அறிவித்தல்

இன்று (07-11-2003) வெள்ளிக்கிழமை மீண்டும் மணல் விநியோகம் நடைபெறவுள்ளது. அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒப்பந்த வேலைகளுக்கான மணலைப் பெறுவதற்கு அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் இன்று மணலை பெற்றுக்கொள்ளலாம். தனியார்களுக்கும், ஆலயங்களுக்குமான மணல் விநியோகம் சில தினங்களில் ஆரம்பிக்கப்படும்.

*மணல் விநியோகப் பகுதி:*
*உடயய கதிர்காமம்,*
*பருத்தித்துறை.* (C-31176) (32-12-31-33)

தலைவர்
புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்,
வடமராட்சி கிழக்கு.


### லஷ்சுமி சினிமா
இணுவில்



விஜய், ரம்பா, மணிவண்ணன், குஷ்பு இன்னும் பலர் நடிப்பில்

மின்சாரக் கண்ணா (கலர்)

காட்சிநேரம்: 11.00, 3.00, 7.00. (பி.நே.)
(24473)

### ராஜா யாழ்ப்பாணம்

விக்ரம், சூர்யா, லைலா, சிம்ரன் நடித்த

பிதாமகன்



காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)
(C-29903) (30)

### லிபேட்டி அச்சுவேலி

சரத்குமார் (இருவேடம்), கிரண், வடிவேல் நடித்த



திவான் (கலர்)

காட்சி நேரம்: 3.00, 7.00.

### நாகம்ஸ் சுன்னாகம்

3ஆவது வெற்றி வாரம்
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தினத்தில் வெளியாகிய
இளைய தளபதி விஜய், ஜோதிகா, கிரண், விவேக் நடித்த



திருமலை

தினசரி காட்சிகள் :11.00 3.00 7.00 (பி.நே.)

### நிரஞ்சனாஸ் சங்கானை

விஜய், பூமிகா நடித்த

பத்ரி (கலர்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு

XXX

பிரசாந்த், சாலினி நடித்த

பிரியாத வரம் வேண்டும்


## அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகிறோம்



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும்
ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும்
கொண்ட எமது இனிய நண்பர்

### உயர்திரு. துரைச்சாமி குருநாதசிவம்

(உரிமையாளர் றோயல் இன்டஸ்ரீஸ் கொழும்பு,
சீவா நறுமணப்பூங்கா, யாழ்ப்பாணம்)

அவர்கள் 06.11.2003 அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ். மாவட்ட நீதிமன்றில், மேலதிக நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்ததையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதுடன், சமூகசேவையில் அவர் கடந்த காலங்களில் கொண்டிருந்த ஈடுபாட்டை மதித்து இப்பதவி வழங்கப்படுவதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் சமுதாயத்தில் மேலும் அவர் சிறந்தவராக சேவையாற்ற எம்பெருமான் சத்திரத்துசந்தி ஸ்ரீ ஞானவைரவப் பெருமான் சகல சௌக்கியங்களையும் வழங்க வேண்டி, பரிந்து வாழ்த்துகிறோம்.

கு.கங்கைவேணியன்
(பசு இடபங்கள் பாதுகாப்பு அமைப்பு).

(C/31175) (33-12-31)

## மரண அறிவித்தல்

### தெண்டாயுதபாணி நாமகள்தேவி

கலைநகர், சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தெண்டாயுதபாணி நாமகள்தேவி அவர்கள் நேற்று (06.11.2003) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பொன்.தெண்டாயுதபாணியின் (இளைப்பாறிய திமர்பரிசோதகர், இலங்கை போக்குவரத்துச்சபை) அன்பு மனைவியும் காலஞ்சென்ற வைத்தியகலாநிதி வடிவேலுவின் அன்பு மகளும், வைத்தியகலாநிதிகளான சண்முகநாதன், சிவகணேசன் கயிலாயநாதன், நீரியல் திணைக்கள பொறியியலாளர் சிதம்பரநாதன், இலங்கை போக்குவரத்துச்சபை இளைப்பாறிய நடத்துநர் முருகநாதன், அராலி இந்துக்கல்லூரி ஆசிரியர் அம்பலநாதன், செல்வநாயகி, சிந்துதேவி, காலஞ்சென்ற அன்னநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கஜேந்திரன் (ஆசிரியர், மு/பெரிய புளியங்குளம் அ.த.க.பா.), விஜேந்திரன் (விஞ்ஞான பட்டதாரி, யாழ்ப்பாண இந்துக்கல்லூரி), குலேந்திரன் (ஆசிரியர்), ரவீந்திரன் (ஆசிரியர்), ரதிகலா, சூரியகலா, சந்திரகலா ஆகியோரின் அன்புத் தாயாரும் கஜேந்திரன் ரேணுகா (டாக்டர், மல்லாவி), விஜேந்திரன் நிர்மலா (எழுதுநர், சமூகசேவைத் திணைக்களம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் துரைராசா (இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2003) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் காலை 11.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலைநகர் வீதி,*
*வட்டுவடக்கு,*
*சித்தன்கேணி.* (24494) (33-12-16-31)

தகவல்:
தெண்டாயுதபாணி (கணவர்),
மக்கள், மருமக்கள்.

# தென்னிலங்கை அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏராளமான போராளிகளும், பொது மக்களும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் கேணல் கருணா அம்மான் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

இடைக்கால நிர்வாக வரைவு மூலம் ஏதும் பிரச்சினை வருமோ, இதனை எவ்வாறு குழப்பலாம் என எதிர்பார்த்திருந்த ஜனாதிபதி, பொறுப்பற்ற முறையில் நாட்டினுடைய தலைவர் என்ற நிலையை மறந்து குழப்பத்தை உருவாக்கியதால் அரசியல் தளம்பல்நிலை தென்பகுதியில் ஏற்பட்டுள்ளது. நாம் இவை எதிர்பார்த்த விடயம்தான்.

இன்று நாம் உரிமைகளைக் கேட்டுக் கொண்டிருக்கின்றோம். இதில் நாம் அதிர்ச்சியடைய ஒன்றும் இல்லை. பேச்சுக்கள் ஆரம்பிக்கும் போதும், தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்படும்போதும் இவ்வாறுதான் குழப்பப்படுகின்றன. நாம் எவ்வாறு விட்டுக் கொடுத்தாலும் இதே நிலைதான் ஏற்படுகின்றது.

தற்போதைய தென்னிலங்கை சம்பவம் தமிழர்களுக்கு பலம் ஏன் தேவை என்பதை நிரூபித்து காட்டி இருக்கின்றது. நாம் தனித்துவமான பலத்தில இருக்கும்போதுதான் எமது உரிமைகளை, இருப்புக்களைப் பாதுகாத்துகொள்ள முடியும். ஆகவே, நாம பலம் பொருந்தியவர்களாக இருக்க வேண்டும் என்பது மீண்டும் ஒரு முறை எமக்கு உணர்த்தப்பட்டுள்ளது. இதை அனைத்து தமிழ்மக்களும் உணர வேண்டும்.

நாம் கடந்த ஒன்றரை வருடங்களில் நிறைய வெற்றிகளை சர்வ தேச ரீதியில் பெற்றுள்ளோம். சர்வ தேச சமூகம் எம்மை தற்போது விடுதலை இயக்கமாகப் பார்க்கின்றது. நாங்கள் பயங்கரவாதிகள் என எம்மை தடைசெய்ய நினைத்த நாடுகள் எல்லாம் இன்று எங்களை விடுதலை இயக்கமாக ஏற்றுள்ளன.

போராட்டத்தில் தவறுகள், பிழைகள் ஏற்படுவது வழமைதான் அதனை திருத்திக்கொண்டு எமது கொள்கையில் இருந்து மாறாமல் கடினமான உழைப்பை தமிழ் மக்கள் மேற்கொண்டால் மாத்திரமே எமது உரிமைகளை நாம் பெறமுடியும். அதைத்தான் இன்று உலகம் எதிர்பார்க்கின்றது.

எனவே, அனைத்துத் தமிழ் மக்களும், புத்திஜீவிகளும் அரசியல் ரீதியாக குரல்கொடுக்க வேண்டும்.

இன்று சிங்களத் தலைவர்களுக்கு சர்வதேச அழுத்தம் ஏற்பட்டுள்ளது. இவர்களின் திருகுதாளத்தினால் உலகத் தலைவர்களின் கவனம் இங்கு ஈர்க்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் உரிமைகளை இலங்கை அரசமைப்புக்குள் இருந்து பெற முடியாது. இதன்காரணமாகவே போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கையின் அரசமைப்பை மாற்றி அமைத்து தமிழ்மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அதற்கான அழுத்தம் இடைக்கால நிர்வாக சபைவரைவு மூலம் இலங்கை அரசுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இதுதான் உண்மை. உலகத்தில் இவ்வாறான வரைவுகள் மேற்கத்திய நாடுகளில் நடை முறைப்படுத்தப்படுகின்றன. அமெரிக்கா போன்ற நாடுகளின் அனுசரணையுடன் சில நாடுகளில் இதே போன்றவரைவு நடைமுறையில் உள்ளது.

இவ்வரைவில் குறிப்பிட்ட விடயங்கள் பேச்சுக்களின் போது பேசப்படும். அத்துடன், இலங்கை அரசு எமது உரிமைகளை விரும்பித்தரும் என்பதில் நாம் எதுவித நாட்டமும் கொள்ளவில்லை. எமது மக்களின் உரிமைகளைப் பெற தலைவரின் கரங்களைப் பலப்படுத்துவோம் - என்றார்.

## லீவில் வந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திருகோணமலை வந்த புலிகள் இயக்க உறுப்பினர் நாதன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட் கப்பட்டவர் ஆவார். கடந்த திங்கட்கிழமை கடற்கரைக்கு ஓய்வெடுக்கச் சென்றவர் பின்னர் காணாமல் போயிருந்தார். அடுதத நாள் காலை சடலமாக மீட்கப்பட்டார்.

சடலம் மீட்கப்பட்ட பகுதிக்கு அண்மையில்தான் இராணுவத்தின் சிங்கப்படைப்பிரிவு அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையின்படி இது கழுத்து நெரித்துச் செய்யப்பட்ட கொலை என்று கூறப்பட்டது.

வித்துடல் புலிகளால் மூதூர் கிழக்கில் உள்ள புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள சம்பூருக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பூரண இராணுவ மரியாதையுடன் அளன்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று விதைக்கப்பட்டது. நிகழ்வில் தளபதிகள் மற்றும் பெரும் எண்ணிக்கையான போராளிகள் கலந்துகொண்டனர்.

## மழையால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வற்றிலும் நேற்று அலுவலர்களின் வரவு குறைந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. நேற்று முற்பகல் வேளை சில பகுதிகளில் கடும் காற்றினால் மரக்கிளைகள் முறிந்து மின்சாரக்கம்பிகளுக்கு மேல் வீழ்ந்ததால் சில பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டது. எனினும் பிற்பகல் வேளையில் மின்சாரசபை ஊழியர்கள் அதனை சீர்செய்ததைக் காணமுடிந்தது.

தாழ் நிலப்பகுதிகளில் வெள்ளம் தேங்கி நின்றதையும் அவதானிக்க முடிந்தது. (எ-4)

## அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று மாலை வாஜ்பாயுடன் தொலைபேசியல் தொடர்புகொண்டு, பிந்திய அரசியல் நிலைமை குறித்து விளக்கம் அளித்தார். இருவருக்கும் இடையேயான உரையாடல் 20 நிமிட நேரம் நீடித்தது.

நோர்வேயின் அனுசரணையுடன் விடுதலைப் புலிகளுடன் இடம்பெறும் பேச்சுக்களுக்கு தான் பூரண ஆதரவு வழங்குவேன் என்று ஜனாதிபதி, வாஜ்பாய்க்கு உறுதி அளித்தார் என இணையத் தளம் ஒன்று தகவல வெளியிட்டுள்ளது. (எ-3)

## செஞ்சிலுவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இப்படித் கூறினார். மேற்படி பாதையை போக்குவரத்துக்கு மூடுவது தொடர்பாக எந்தவிதமான அறிவிப்பும் எமக்குக் கிடைக்கவில்லை. வழமை போல் இப்பதையூடான போக்குவரத்துக்கள் காலை 7 மணி முதல் மாலை 5.30 மணிவரை இடம்பெறவிருக்கின்றன. எமது பிரசன்னம் தொடர்ந்து இருக்கும் என்றார் அவர்.

ஏ-9 பாதை போக்குவரத்துக்கு மூடப்படவில்லை என்று விடு தலைப் புலிகளும் நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தமை தெரிந்ததே.

## நாரந்தனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நீதிவானின் தீர்ப்பு அதன் பின்னர் வழங்கப்படும்.

மேற்படி தாக்குதல் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார்; பலர் காயமடைந்திருந்தனர்.

இந்தக் கொலை வழக்கில் எதிரிகளுக்கு எதிராகக் குற்றம் சுமத்துவதற்குப் போதிய ஆதாரங்கள் இருப்பதைக் கண்டறிவதற்கான சுருக்க முறையற்ற விசாரணையையே நீதிவான் நீதிமன்றம் இப்போது பூர்த்தி செய்கின்றது.

எதிரிகளுக்கு எதிராக விசாரணை நடத்துவதற்குப் போதிய ஆதாரங்கள் இருப்பதாக நீதிவான் நீதிமன்றம் கருதுமானால் வழக்கை விசாரணைக்காக மேல் நீதிமன்றத்துக்குப் பாரதீனப்படுத்தும். இல்லையேல் எதிரிகளை விடுவித்துத் தீர்ப்பளிக்கும். (எ-3-5-86)

## ரணிலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யில் இருந்து வரும் ஜனநாயக செயல் முறைகளுக்கும் ஜனாதிபதி புஷ் தனது பலத்த ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தினார்.

"சுதந்திர வர்த்தகத்தின் முக்கியத்துவம் குறித்தும் இரு தலைவர்களும் பேச்சு நடத்தினார்கள். மெச்சிக்கோவில நடைபெற்ற வர்த்தகம் தொடர்பான 'கன்குன்' மாநாட்டில் அமெரிக்காவின் நிலைப்பாட்டுக்கு ஆதரவு வழங்கியதற்காக ஜனாதிபதி புஷ் பிரதமர் ரணிலுக்கு நன்றி தெரிவித்தார்."

- இப்படி வெள்ளை மாளிகைப் பேச்சாளர் கூறினார்.

இலங்கையில் நாடாளுமன்றத்தைக் கலைப்பது குறித்து இரு தலைவர்களும் பேசினார்களா என்ற கேள்விக்கு வெள்ளை மாளிகைப் பேச்சாளர் பதில் அளிக்கையில், "இலங்கையின் உள்நாட்டு விவகாரம் இது. இலங்கையில் ஜனநாயக அமைப்புகள் இருக்கின்றன. இந்தப் பிரச்சினையை அவை தீர்க்கும் என்பது எமது நம்பிக்கை" என்று கூறினார்.

இலங்கை ஜனாதிபதியுடன் அமெரிக்க ஜனாதிபதி தொடர்பு கொண்டுள்ளாரா? என்ற கேள்விக்குப் பதில் அளிக்கையில் 'இல்லை' என்று வெள்ளை மாளிகைப் பேச்சாளர் தெரிவித்தார். (எ)

# அமெரிக்க விஜயத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாட்டின் பல பாகங்களிலும் இருந்து பல லட்சம் பொதுமக்கள் இதற்கென கொழும்பில் ஒன்று கூடுவர் என்று ஐ.தே.க.பேச்சா ளர் ஒருவர் கூறினார்.

கட்டுநாயக்க விமானநிலைய சந்தியில் கட்டான தொகுதி மக்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர் ஒலித்த பிரேமரத்ன தலைமையில் பிரதமருக்கு வரவேற்பளிக்கப்படும்.

களனி பழைய பாலத்தில் கொழும்பு மாவட்ட எம்.பி. நிலந்த பெரேரா தலைமையிலும், ஆமர் வீதி சந்தியில் நாடாளுமன்ற உறுப்பினர் மஹ்ரூப் தலைமையிலும் கண் ஆஸ்பத்திரி சந்தியில் அமைச்சர் எம்.எச். முஹம்மது தலைமையிலும் நகரசபை மண்டபத்தில் கொழும்பு மேயர் பிரசன்ன குணவர்த்தன தலைமையிலும வரவேற்பளிக்கப்படும்.

கொள்ளுப்பிட்டிச் சந்தியில் அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்களும், பொதுமக்களும் பிரதமருக்கு வரவேற்பளிப்பர்.

இதற்கிடையில் - நேற்றுமுன்னிரவு தொடக்கம் கட்டுநாயக்காவிலிருந்து கொழும்பு வரையிலான வீதியில் பல இடங்களிலும் ஐ.தே.கட்சியின் ஆதரவாளர்கள் பச்சைக்கொடிகளையும் பச்சைநிறத்திலான வரவேற்பு பதாகைகளையும், பிரதமரின் முழுஅளவிலா கட்-அவுட்களையும் கட்டுவதிலும் மும்முரமாக ஈடுபட்டனர் என ஒரு தகவல் தெரிவித்தது.

மக்களின் ஆணைப்படி ஆட்சிப் பொறுப்பைக் கையேற்ற பிரதமர், தொடர்ந்தும் ஆட்சியைக் கொண்டு நடத்த மீண்டும் ஆணையிடுகிறோம் என்ற மகஜர் ஒன்றும் பொதுமக்களால் பிரதமரிடம் கையளிக்கப்படும் என்று நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் தெரிவித்தார்.

# பேச்சு மூலமான தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மக்களுக்கு உறுதியளிக்கின்றார். அரசமைப்பு ரீதியாக நாட்டின் தலைவர் என்ற முறையில், நாட்டின் இறைமை மற்றும் பாதுகாப்பு மீதான உயர் ஈடுபாட்டின் அடிப்படையில் ஆகத் தனது பொறுப்புகளையே ஜனாதிபதி நிறைவேற்றியிருக்கின்றார்.

உள்துறை அமைச்சின் செயலாளர் தொடர்ந்து அப்பதவியில் இருக்கத்தக்கதாக பாதுகாப்பு அமைச்சுக்கும் மக்கள் தொடர்பாடல் அமைச்சுக்கும் இரண்டு புதிய செயலாளர்களை ஜனாதிபதி நியமித்துள்ளார். தற்போது ஜனாதிபதியின் கீழ் வந்துள்ள நான்கு ஊடகங்களினதும் பணிப்பாளர்களை அவர் மீளமைத்திருக்கின்றார். இந்தச் சபைகளின் தலைவர்கள் பதவியேற்றுள்ளார்கள்.

ஊடகங்களின் கருத்து வெளியிடும் உரிமையை ஜனாதிபதி உறுதிப்படுத்தியுள்ளார். இந்த ஊடக நிறுவனங்களின் முதல் பொறுப்பு, தப்பபிப்பிராயத்தையோ, வேண்டுமென்றே பக்கம் சார்வதையோ தவிர்த்து உண்மைகளையும் நிகழ்வுகளையும் நாட்டுக்கு வெளிப்படுத்துவதாகும். வெளிப்படுத்தப்படும் செய்திகளும் தகவல்களும் நாட்டின் சட்டங்களையும், பொதுவான ஒழுக்கக கோட்பாடுகளையும், சமூக நலனின் உறுதியையும் மீறாதவையாகவும், நாட்டின் பாதுகாப்புக்கு ஊறுவிளைவிக்காதவையாகவும் இருக்கவேண்டும்.

வதந்திகள் குறித்து வர்த்தக சமூகம் அதிக கவலை கொண்டுள்ளது. ஆழ்ந்த சிந்தனையின் பின்னரே தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அண்மைக்கால நடவடிக்கைகளை தாம் எடுத்துள்ளார் என்பதை தொழில்துறைத் தலைவர்களுக்கு ஜனாதிபதி உறுதிப்படுத்துகின்றார். இச்செயற்பாடு மூலம் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அவர் அதிகரிக்கச் செய்துள்ளார்.

யுத்தநிறுத்த உடன்பாட்டைப் பேணுவதிலும், புலிகளுடன் தொடர்பாடல் மற்றும் ஐக்கிய இலங்கைக்குள் பேச்சு மூலமான தீர்வை காண்பது ஆகியவற்றில் திறந்தநிலையைப் பின்பற்றுவதிலும் ஜனாதிபதி தொடர்ந்து உறுதியாக உள்ளார்.

மோதலுக்கு மீண்டும் திரும்புவதில்லை என்பதை இந்த நாட்டு மக்களுக்கு உறுதிப்படுத்த ஜனாதிபதி விரும்புகிறார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சைத் தொடரும் அதேசமயம் -

இந்த நெருக்கடிக்கு, இலங்கையில் உள்ள சகல இன மக்களுக்கும் கௌரவத்துடன் கூடிய சமாதானத்தைத் தரக்கூடிய பேச்சு மூலமான தீர்வை எட்டுவதற்கான அதன் தேடலுக்கு, அதரவும் வழிகாட்டுதலும் வழங்கப்படும் - என்று உள்ளது. (எ)


IIS
புலமைப்பரிசில் திட்டம் 2004
கல்வியாண்டு 2004/2005 இல் புலமைப்பரிசில் திட்டம் 2004 இனூடாக எமது நிறுவனத்தில் கல்வி பயிலவிரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்ப முடிவு திகதி : 15.11.2003
விண்ணப்பப் படிவங்களினை IIS அலுவலகங்களிலும் மற்றும் நாட்டின் அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
மேலதிக விபரங்களுக்கு
இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்.

CHEMISTRY GROUP
பௌதிக இரசாயனம்
பிரிவு III
ஆரம்பம் : 08.11.2003
5.00 p.m.
Sat., Sun. 5.00 - 6.30 p.m.
Mon., Fri. 6.30 - 8.00 a.m.
(S.L.T.)
By: N. VAKEESAN
188, இராமநாதன் வீதி, திருநெல்வேலி.

A/L 2005
கணக்கீடு
திரு. பாலவாசன்
B.B.A. (F.M.Spl.)
உற்பத்திக் கணக்கு
Sat., Sun. - 12 - 1
ஆரம்பம்: 08.11.2003 - Sat. 12.00
BEACON
வெலிங்டன் சந்திப்பகுதி
(24410) (12)

NEW SCIENCE COLLEGE JAFFNA
இலத்திரனியல்
Sat., Sun. - 7.00 - 8.00
ஆரம்பம்: 08.11.2003
BY: கருணாநிதி
B.Sc.(Spl.) (24487) (12)

அறிவித்தல்
மெடிக்குவிக் டயக்கொனஸ்ரிக்ஸ்
MEDIQUICK DIAGNOSTICS
514/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். ☎ 222 2960
எமது நிறுவனத்துக்கும் மெடிக்குவிக் டயக்கொனஸ்ரிக்ஸ் பிறைவேட் லிமிட்டெட்டிற்கும் (MOBILE SERVICE) எதுவித தொடர்புகளும் இல்லை என்பதை வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.
அ.சுந்தரலிங்கம் (M.L.T.)
(24422) (30-18-12)

வெஸ்டன் லொட்ஜ்
WESTERN LODGE
270, செட்டியார் தெரு, கொழும்பு -11.
சகல வசதிகளுடன் சௌகரியமாகவும், பாதுகாப்பாகவும் தங்குவதற்கு குறைந்த செலவில் தலைநகரில் தங்குமிட வசதிக்கு தொடர்புகொள்ளவும்.
தொலை பேசி : 2433753, 2438570
தொலைநகல் : 2332557





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.11.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.